egistered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 343
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 10 ஜுலகஃ 25 சனிக்கிழமை (23-1-71)

நற்செய்தி!

விஜயாஸ் நில சோப்
25 மேலுறைகளை சேகரித்து
உங்கள் வாடிக்கை கடைகளில்
கொடுத்து வைத்து அழகான
படம் ஒன்றை பெற்றுக் கொள்ளுங்கள்.

அதிபர்

முருகானந்தா
குடிசைக் கைத்தொழிற்சாலை
முகமாலை,
எழுதுமட்டுவாள்.

# கம்போடிய தலைநகர் மீது கம்யூ. படைகள் தாக்குதல்

## விமான நிலையத்தின் பெரும் பகுதி நாசம்

நாம்பென், ஜன.22

கம்போடிய தலைநகரான நாம்பென்மீது கம்யூனிஸ்ட் விடுதலைப் படைகள் இன்று முதல் தடவையாக சரமாரியான குண்டுகளைப் பொழிந்து தாக்குதல் நடத்தினர்கள்.

இத் திடீர் தாக்குதலினுல் நாம்பென் நகர் அல்லோல கல்லோலப்பட்டது. அதிகாரிகள் திக் பிரமையடைந்து போனுர்கள்.

கடந்த இரவு முழுவதும் நாம்பென் விமான நிலையத்தின்மீது விடுதலைப் படையினர் மூர்க்கமான தாக்குதல் நடத்தினர்கள். விமான நிலையத்தின்மீது பீரங்கிகளாலும் ரெக்கட்டுகளாலும் கம்யூனிஸ்டுகள் தாக்கினுர்கள். தாக்குதல் திடீரென்று ஆரம்பித்தது. விமான நிலையத்தின் வாயில்களையும் கட்டிடங்களையும் கடுமையாக கம்யூனிஸ்டுகள் தாக்கினுர்கள்.

ஏராளமான விமானங்கள் சேதமுற்றன. விமான நிலையத்தில் குதங்களில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த குண்டுகளும் தோட்டாக்களும் வெடித்து பெரும் தீ ஜுவாலைகளை எழுப்பிக் கொண்டிருந்தது; எங்கும் ஒரே பீதி.

விமானநிலயத்தையடுத்துள்ள கிராமவாசிகள் பீதி கொண்டு எட்டு மைல்களுக்கு அப்பாலிருக்கும் தலைநகரை நோக்கி ஓடினுர்கள்

### மேயர் மறுப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின்படி திரு ஏ ஜி இராஜசூரியர் யாழ் மாநகரசபை உறுப்பினர் பதவியை இழந்துள்ளதால், அவரை மற்றும் மாநகரசபை உறுப்பினர்களுடன் நான் மகா தேசாதிபதி திரு வில்லியம் கோபல்லாவிற்கு அறிமுகம் செய்து வைக்கவில்லை என்று யாழ்ப்பாணம் மேயர் திரு ரி எஸ். துரைராஜா தெரிவித்துள்ளார்.

அவர் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் நபர்களுடன், ஒருவராக அங்கு நின்றுர் என்று மேயர் மேலும் தெரிவித்துள்ளார்.

'மாநகரசபை புதிய அலுவலக கட்டிடதிறப்புவிழாவின் போதும், திரு இராஜசூரியர் அங்கு காணப்பட்டபோதிலும் அவர் மாநகரசபை உறுப்பினரல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்' என்றும் மேயர் கூறுகிருர்.

## நிதியமைச்சர் என். எம். நாளை யாழ். வருகிருர்

யாழ்ப்பாணம், சனி

ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா முதல் தடவையாக நாளை உத்தியோகபூர்மாக வட பகுதிக்கு விஜயஞ்செய்கின்ருர்.

நாளை மாலை 3-30 மணிக்குப் பலாலி விமானநிலையத்தை வந்தடையும் நிதியமைச்சருக்கு விமானநிலயத்தில் வரவேற்பு அளிக்கப்படும்.

பலாலியிலிருந்து மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு வரும் வழியில் பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை மாவிட்டபுரம், தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னுகம் மருதனுமடம், உடுவில் ஆகிய இடங்களில் நிதியமைச்சருக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

மாலை 5-15 மணிக்குத் தேசிய சுவீப் இழுப்பு விழாவில் கலந்துகொள்வார். இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ளூர்க் கட்சி உறுப்பினர்களைச் சந்திப்பார். இரவு 8மணிக்கு வட பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர்களைச் சந்திப்பார். இரவு 8-30 மணிக்கு அரசாங்க அதிபர் இராப்போசன விருந்தளிப்பார்.

25ந் திகதி காலை 10மணிக்கு நாகவிகாரைக்கும்,

(8-ம் பக்கம் பார்க்க)

கிரிக்கட்

### ஆஸ்:493—9 இங்: 28

சிட்னி, ஜன. 12

ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்கு மிடையில் நடைபெறும் 5வது டெஸ்ட் கிரிக்கட் போட்டியில் ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் 9 விக்கட் நஷ்டத்துக்கு 493 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை முடித்துக்கொண்டது. இங்கிலாந்து ஆட்டம் முடியும்போது விக்கட் நஷ்டம் எதுவுமின்றி 28 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

அப்பலோ-14 மூலம்

## சந்திர மர்மங்கள் வெளியாகும்

ஹூஸ்டன், ஜன.22

சந்திரனைப் பற்றிய பல்வேறு புதிய தகவல்களைக் கொடுக்கக் கூடிய இடம் என்று கருதப்படும் பாறைகள் மிகுந்த மலைப் பிரதேசத்தில் அமெரிக்காவின் அப்பலோ-14 வீரர்கள் போய் இறங்கவிருக்கிருர்கள்.

அப்பலோ-14 ஜனவரி 31-ம் திகதி (இலங்கைநேரப்படி பெப்ரவரி 1-ம் திகதி 1-53 மணி) கென்னடிமுனையிலிருந்து செலுத்தப்படும். இந்தப் பிரயாணத் திட்டம் முடிவுற 9 நாட்கள் பிடிக்கும். ஒன்பதாவது நாள் வீரர்கள் மூவரும் தென் பசிபிக் சமுத்திரத்தில் வந்திறங்குவார்கள் இது வரை மேற்கொள்ளப்பட்ட விண்வெளித் திட்டங்களில் இதுவே மிகவும் சிக்கலானதாகவிருக்கும் என்று கருதப்படுகின்றது.

ஃப்ரா மாவ்ரோ என்றழைக்கப்படும் சந்திரப் பகுதியில் இறங்கவிருக்கும் அப்பலோ வீரர்கள் அப்பகுதியில் பொதிந்து கிடக்கும் பெறுமதிமிக்க விஞ்ஞான ரகசியங்களை எடுத்து வருவார்கள்

### புதுடில்லியில் தான்சானிய அதிபர்

புதுடில்லி, ஜன.21

தான்சானிய அதிபர் ஜூலியஸ் நைரேரே இன்று புதுடில்லிவந்து சேர்ந்தார். அவரை இந்திய ஜனதிபதி திரு வி வி கிரி வரவேற்ருர். தான்சானிய அதிபர் 8 நாட்கள் இந்தியாவில்தங்குவார்

### இந்திய தலைமைநீதிபதி

புதுடில்லி, ஜன. 22

இந்திய சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதியாக திரு. எஸ். எம். சிக்ரி இன்று ஜனதிபதி கிரி முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

### அப்பீல் செய்யப்படும்

யாழ்ப்பாணம், சனி

வட்டுக்கோட்டை தேர்தல் ஆட்சேப மனுவின் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப்படுமென்று மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் திரு. எம். திருச்செல்வம் கியூ சி. நமது நிருபரிடம் தெரிவித்தார். அப்பீல் சம்பந்தமாக, தற்பொழுது சிரேஷ்ட வழக்கறிஞர்களுடன் ஆலோசனை நடைபெறுவருவதாக அறியப்படுகிறது

# தென் ஆபிரிக்கா வாக்குறுதிகளை மதிக்குமா?

## சிங்கப்பூர் மாநாட்டில் பீலிக்ஸ் வெளியிட்ட சந்தேகம்

சிங்கப்பூர், ஜனவரி 22

தென்னுபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் விற்க விருப்பதின் காரணமாக காமன்வெல்த்நாடுகளில் ஏற்பட்டுள்ள பீதி குறித்து நேற்று இலங்கை பொதுநிர்வாக, உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க உரைநிகழ்த்தினர்.

பிரிட்டன் ஆயுத விற்பனையினுல் ஏற்படக்கூடிய நிலைமைகள் குறித்து ஏற்கனவே இலங்கைப் பிரதம மந்திரி கூட்டத்தில் பேசியிருப்பதை திரு. பண்டாரநாயக்கா சுட்டிக்காட்டினுர்.

காமன்வெல்த் நாடுகளுக்கிடையில் உறவுகளை நாம் பெரிதும் மதிக்கின்ருேம். ஆனுல் தென்னுபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம்விற்க முடிவுசெய்தால் இந்த ஸ்தாபனமே சிதைந்து போகக் கூடும் என்று அவர் எச்சரித்தார்.

தென்னுபிரிக்காவுக்கு விற்கப்படும் ஆயுதங்களை பாதுகாப்புக்கன்றி வேறு காரணங்களுக்குப் பயன்படுத்தாமலிருக்கும் விதத்தில் அந்த நாட்டிடம் உறுதிமொழி வாங்கப்போவதாக பிரிட்டன் கூறலாம். ஆனுல் இந்த உத்தரவாதங்களை தென்னுபிரிக்கா மதிக்குமா என்பதே பிரச்னையாகும் என்ருர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா. மகாநாடு இன்று அதன் இறுதி கூட்டத்தை நடத்துகின்றது. காமன்வெல்த் நாடுகளுக்கான கொள்கைப்பிரகடனம் சம்பந்தமாக சாம்பியா சமர்ப்பித்துள்ள திட்டத்துக்கு பிரிட்டனும்அவுஸ்திரேலியாவும் திருத்தங்களைத் தாக்கல் செய்துள்ளன.

## வரி விளம்பரம்

### தேவை

றேடியோ திருத்துவதில் 10 வருட அனுபவமுள்ளவர்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். ரமணி கோப்பரேஷன் (Ramani Corporation) 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2672

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கமிஷன் அடிப்படையில் பணியாற்ற 'நிக்கோசுஜ' ஏல விற்பனை நிலையத்திற்கு வெளியமைப்பாளர், கன்வேஷர்கள் தேவை. 25 வயதுக்கு மேற்பட்ட ஆங்கிலம், தமிழில் தேர்ச்சியுள்ள ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் முடிவுதிகதி 31-1-71. சமீபகால நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும் எஸ். நரசிங்கம் J. P., இரண்டாவது மாடி, 166 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2676

யாழ்ப்பாணம், கொழும்பு செல்லு லொறிக்கு கல்யாணபாரம அனுபவமுள்ள கிளீனர் தேவை. விளம்பர இல: 2675, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2675

### விற்பனைக்கு

பருத்தித்துறை - தும்பளை வீதியில் நகரசபை எல்லைக்குள் 2 பரப்புக் காணியும் மாடி வீடும் மின்சார-தண்ணீர் வசதிகளுடன் ரூபா 20,000/- அ. வி. ஜெயசீலன், கச்சேரி, புத்தளம். 2668


## நெசவாலைகள் ஸ்தம்பிதம்

சாய்ந்தமருது, வெள்ளி

கல்முனைப் பகுதியில் தற்போது கைத்தறி நெசவு நூலின் விலை தினமும் அதிகரித்துள்ளது. இதனால் கைத்தறி நிலையங்களில் வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. ரூ. 7-50 பெறுமதியான கைத்தறி சாரம் 12 ரூபாவுக்கு மேல் விலை போகிறது.

## வைக்கோல் சேகரிப்பு நிலையம்

சாய்ந்தமருது, வெள்ளி

கிழக்கிலங்கைக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்துக்கு மேலும் வைக்கோல்களைச் சேகரித்துக் கொள்வனவு செய்ய அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த உகனைப் பகுதியில் வைக்கோல் சேகரிப்பு நிலையம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

## கலாசாரத்தைப் பிரதிபலிப்பதே நாடகம்

தாவடி, வெள்ளி

"தமிழரின் பாரம்பரிய பொக்கிஷமான கலை, கலாசாரம், பண்பாடு என்பன வற்றையும் விளக்கக்கூடிய வகையில் நாடகங்களைத் தயாரித்தல்வேண்டும் நாடகக்கலைஞர்களை நாம் போற்றுதல்வேண்டும். ஈழத்திலும் தரமான நாடக நடிகர்கள் இருக்கிறார்கள். ரசிகர்கள் அவர்களை நல்லமுறையில் ஆதரித்து கலையை வளர்க்க முன்வருதல்வேண்டும். நாடகங்களிலே கொச்சைத் தமிழ் இடம் பெறுதல் கூடாது"

இவ்வாறு தாவடி காந்தி கலைவளர்ச்சி மன்றத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய "கலைச்செல்வன்" திரு. எஸ். எஸ். சண்முகநாதன் கூறினார். திரு. ஆ. தியாகலிங்கம் தலைமை வகித்தார்.

## மீண்டும் நியமனம்

கோட்டை, வெள்ளி

1965-ம் ஆண்டில் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்திலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 219 ஊழியர்கள் திரும்பவும் வேலைக்கு அமர்த்தப்பட விருக்கின்றனர்.

இத் தகவலை கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத் தலைவர் தெரிவித்துள்ளார் இவ்வூழியர்கள் தற்போது சகல மாகாணங்களிலும் திறக்கப்பட்டுள்ள மொத்த விற்பனவு பண்டகசாலைகளில் நியமனம் பெறுவர்.

## அங்குரார்ப்பணம்

தாவடி, வெள்ளி

கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலைய இளைஞர்களால் இளந்தளிர் விளையாட்டுக் கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது இந்நிகழ்ச்சிக்கு திரு. அப்புத்துரை கனகலிங்கம் தலைமை வகித்தார்.

'தமிழ் ஆசிரியர் இடமாற்றம்:

# திட்டத்துக்கு முரணானதை மேன்முறையீடுசெய்யலாம்"

கொழும்பு, வெள்ளி

அநீதியானமுறையில் ஆசிரியர் இடமாற்றம் நடைபெறுவதாக அகில இலங்கை கவிகரிக்கப் பெற்ற தமிழ் ஆசிரியர்சங்கச்செயலாளர் திரு. த. திருநாவுக்கரசு பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை சம்பந்தமாக அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளரும் மத்திய இடமாற்றச் சபை தமிழ்ப் பிரதிநிதியுமான திரு. ந. பாலசுப்பிரமணியம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மத்திய இடமாற்றச் சபை ஆசிரிய இடமாற்றங்களை மிகக் கவனமாகவும் நுணுக்கமாகவும் அணுகுகின்றது. சகல ஆசிரியர்களுக்கும் சமநீதியும் சம சந்தர்ப்பமும் கிடைக்கக் கூடியதாகத் திட்டங்களை வகுக்கின்றது. மத்திய இடமாற்ற சபையில் அனுபவமிக்க தொழிற் சங்கவாதிகளும் அமைச்சு அதிகாரிகளும் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் ஏதாவது பிழை விட்டால் இவர்களைப் பதவியில் இருந்து நீக்க அந்தச் சங்கங்களுக்கு அதிகாரம் உண்டு. வல்லமையுண்டு. இதைத் தவிரப் பிழைகளை எடுத்துக் காட்டி மத்திய மாற்றச் சபையிடமோ அன்றி இன்னும் மேலிடத்திலோ நீதிகேட்க எந்த ஒரு ஆசிரியனுக்கும் உரிமையுண்டு.

தமிழராகவுள்ள ஆசிரியர்களின் இடமாற்றங்களெல்லாம் மத்திய மாற்றச் சபையால் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கமையவே நடைபெறுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு மாறாக எந்த ஒரு ஆசிரியராவது மாற்றம் செய்யப்பட்டிருப்பின் அதற்கான விளக்கம் மாற்றச்சபைத் தலைவராலோ செயலாளராலோ கொடுக்கப்படவேண்டும். விளக்கம் திருப்திகரமாக இல்லாவிட்டால் அதுபற்றி மேலிடத்துக்கு முறையிடலாம். திட்டங்கள் எல்லா ஆசிரியர்களுக்கும் சமநீதியும் சம சந்தர்ப்பமும் கிடைக்கக் கூடிய வகையில் வகுக்கப்பட்டுள்ளன. இருபத்தைந்து ஐம்பது ஆசிரியர்களைக்கொண்ட சங்கங்களின் ஆலோசனைகளுக் கிணங்க இவை வகுக்கப்படவில்லை. பல்லாயிரக் கணக்கான தமிழ் ஆசிரியர்களைக்கொண்ட சங்கங்களின் ஆலோசனைகளுக்கு இணங்கவே வகுக்கப்பட்டவை

இத்திட்டங்களுக் கெதிராகவும் மாற்றச் சபைக்கெதிராகவும் சில காளான் சங்கங்கள் சங்கச் செயலாளருக்கு மாற்றம் வந்தவுடன் மாத்திரம் இயங்கத்தொடங்குகின்றன.

மத்தியஇடமாற்றச் சபையில் உள்ள பல்லாயிரம் ஆசிரியர்களைக்கொண்ட சங்கங்களின் பிரதிநிதிகளை இக்குட்டிச் சங்கச் செயலாளர்கள் திட்டமுற்படுவது அவர்கள் ஆற்றுமையைக் காட்டுகிறது.

தமிழ் ஆசிரியர் இடமாற்றங்கள் எந்த அடிப்படையில் நடைபெறுகின்றன என்பதை விளக்கும் சுற்றுநிருபம் ஒன்றையும் மத்திய இடமாற்றச்சபை உறுப்பினர் திரு. ந. பாலசுப்பிரமணியம் அனுப்பிவைத்துள்ளார்.

## கல்முனையிற் சலுசலா

சாய்ந்தமருது, வெள்ளி

காத்தான்குடியில் தற்போது இயங்கிவரும் மட்டக்களப்பு சலுசலாக்கிளை எதிர்வரும் பெப்ரவரிமாத நடுப்பகுதியில் கல்முனைக்குஇடம் பெயரவுள்ளது.

கல்முனை 5ம் வட்டாரப் பிரதான வீதியில் கட்டப்பட்டுவரும் இப்புதிய கட்டிட வேலைகள் யாவும் இம்மாத நடுப்பகுதியில் பூர்த்தியடைந்துவிடுமென்று தெரியவருகின்றது.

## எங்கே பல்கலைக் கழகம் அமைப்பது?

சாய்ந்தமருது, வெள்ளி

கிழக்கிலங்கையில் அமைக்கப்படவிருக்கும் தமிழ்ப்பல்கலைக் கழகத்தை மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களுக்கு மத்தியிலுள்ள கல்முனையில் அமைப்பது உகந்ததா? என்பது பற்றிய கருத்துக்களை கிழக்கிலங்கையிலுள்ள பலமுக்கிய சங்கங்கள், மன்றங்களுடன் தொடர்புகொண்டு அறிய உள்ளதாக சாய்ந்தமருது ப வே.இ. வா. சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## நஷ்டஈடு கோரி வழக்கு

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறை ஐயனார் வீதியைச் சேர்ந்த இராஜேந்திரம் சிவபாதசுந்தரம் என்பவர் மின்சாரம் தாக்கி மரணமானதைத் தொடர்ந்து அவரது மனைவியான பரமேஸ்வரி தமக்கு ரூபா 30,000 நஷ்டஈடு வழங்குமாறு கோரி பருத்தித்துறை நகரசபை மீது வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.


**ராணி சினிமா** (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

சிவாஜிகணேஷன் - சரோஜாதேவி நடித்த

**அன்பளிப்பு**

**வின்ஸர்** யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன் - சௌகார் ஜானகி நடித்த

**சக்கரம்**

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (கொழும்பு)



சிவாஜி - காஞ்சனா

எம். என். நம்பியார்

நாகேஷ் முத்துராமன்

இன்னும் பலர் நடித்த

**சிவந்த மண்**

(ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்)

சில தினங்களுக்கு மட்டும்

கிங்ஸ்லி 2-00, 6-00, 9 30

ஏ. வி. எம். ராஜன் வாணிஸ்ரீ சிவகுமார் நடித்த

**அன்னையும் பிதாவும்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

ஜோய்முகர்ஜி - சயிராபானு நடித்த

**ஜேய் சிந்தகி ஹிட்னி கிசன் ஹை** (ஹிந்தி - கலர்)

**வெல்லிசினிமா** காவிப்பாய்

தினசரி 3-30, 6-30, 9-30

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த

**பெரிய இடத்துப் பெண்**

**ஸ்ரீகாலிங்கன்** இணுவில்

தினசரி 6-30, 9-30

போயா நாட்கள் 2-30

ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா நடித்த

**பெண்ணே நீ வாழ்க**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)

தினசரி 6-30, 10-00 மணி

ராஜ்குமார் - ரஃகிஸா நடித்த

**ஜாக்பாட்டில் ஸி. ஐ. டி. 999**

REGAL Jaffna

Daily 4-45, 7,9-45 p.m.

Poya days 4 shows

Diana Dors in

HAMMER HEAD

(colour)


## திருமண அழைப்பு

நிகழும் சாதாரண வருஷம் தை மாதம் 14-ந் திகதி புதன்கிழமை (27-1-1971) மாலை 7-30 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் வரும் சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எனது புதல்வன் திருநிறை செல்வன் வே. அழகேந்திரன் (அளவை நிலக்களம்) அவர்கட்கும் | எமது புதல்வி திருவளர் செல்வி ரத்னதேவி அவர்கட்கும் |

திருமண விழா திருவருள் நலத்தினால் மணமகள் இல்லத்தில் நடைபெறும். உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் நல்வரவு தந்து மணமக்களை வாழ்த்திடவேணுமாறு வேண்டுகிறோம்.

திருமதி க. வேலுப்பிள்ளை
மலர் அகம்
பொலிகண்டி.

ச. செ. சபாரெத்தினம் தம்பதிகள்
வசந்த வாசா
வல்வெட்டித்துறை.

2740

# தி. மு. க. - இந்திரா காங்கிரஸ் தேர்தல் உடன்பாட்டில் முட்டுக்கட்டை

## தொகுதி ஒதுக்குவதில் கருத்து வேறுபாடு

புதுடில்லி, ஜனவரி 22

**அடுத்துவரும்பொதுத் தேர்தலில்உடன்பாடுகள் செய்து கொள்வதற்காக திரு. ஜகஜீவன்ராம் தலைமை காங்கிரஸ் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குமிடையில் நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகள் முட்டுக்கட்டையில் முடிவடைந்துள்ளது.**

தொகுதி உடன்பாடுகள் செய்து கொள்வது சம்பந்தமாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுக்கும் ஜகஜீவன் ராம் தலைமைக் காங்கிரஸ் கட்சிக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கவில்லை தமிழ் நாட்டில் தொகுதி நிர்ணயம் சம்பந்தமான கருத்துப் பரிமாற்றங்கள் குறித்து ஜகஜீவன் ராம் காங்கிரஸ் தலைவர்கள் திருப்தியடையவில்லை.

மேற்கு வங்காளத்தில் பாங்களா காங்கிரஸ் கட்சிக்கும் ஜெகஜீவன்ராம் காங்கிரஸ் கட்சிக்குமிடையில் நடைபெற்றுவந்த தேர்தல் உடன்பாடுகள் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளும் முறிந்து போயுள்ளன.

### கதவு திறந்திருக்கும்

திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தேர்தல் உடன்பாடுகள் சம்பந்தமாக நடைபெற்று வந்த பேச்சுக்களில் முட்டுக்கட்டை ஏற்பட்டு விட்டபோதிலும் மீண்டும் தி மு க தலைவர்கள் பேச்சு நடத்த விரும்பினால் எமது கட்சியின் கதவுகள் திறந்தே இருக்கும் என்று ஜகஜீவன் ராம் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவரான திரு. ஆர். வி. சுவாமிநாதன் கூறினார்,

தமது கட்சிக்கு லோக சபைக்கான தேர்தலில் 12 தொகுதிகளில் போட்டியிட வாய்ப்பளிப்பதாகவும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் ஒப்புக் கொண்டிருந்ததாகவும், ஆனால் பேச்சுவார்த்தைகளின் போது லோக் சபைக்கு 5 தொகுதிகளிலும் சட்ட சபைக்கு 10 அல்லது 15 தொகுதிகளிலும் போட்டியிட இடம் தருவதாகவும் அவர்கள் முன்வந்ததாகவும் திரு சுவாமி நாதன் தெரிவித்தார். பேச்சுவார்த்தைகளிலிருந்து தாங்கள் வெளிநடப்பு செய்ததாகக் கூறப்படுவது தவறு என்றும் தங்கள் கட்சியின் கதவுகள் திறந்தே கிடப்பதாகவும் அவர் சொன்னார்.

### முதல்வர் மறுப்பு

ஜகஜீவன் ராம் காங்கிரஸ் கட்சிக்கு 12 லோக சபைத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளிப்பதாக தாங்கள் ஒப்புக் கொண்டதாகக் கூறப்படுவதை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் முதலமைச்சருமான திரு. கருணாநிதி மறுத்தார்.

தங்கள் கட்சி சட்டசபை தொகுதிகள் சுமார் 170 க்கும், லோகசபைக்கு 25 தொகுதிகளிலும் போட்டியிடும் என்று தெரிவித்த அவர் திரு. சுவாமிநாதன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவது சம்பந்தமாகத் தெரிவித்துள்ள கருத்து பற்றி ஆலோசிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

### மேற்கு வங்கத்தில்

மேற்கு வங்காளத்தில் பாங்களா காங்கிரஸ் கட்சிக்கும் ஜெகஜீவன்ராம் காங்கிரஸ் கட்சிக்குமிடையில் தேர்தல் உடன்பாடுகள் சம்பந்தமாக நடந்த பேச்சுக்கள் முறிந்து போய்விட்டன. கட்டு முன்னணியிலிருந்து தமது கட்சி வெளியேறி விடும் என்று ஜெகஜீவன்ராம் காங்கிரஸ் தலைவர்கள் தெரிவித்தனர். நிஜலிங்கப்பா தலைமைக் காங்கிரஸ் கட்சியுடன் பாங்களா காங்கிரஸ் இரகசிய தேர்தல் உடன்பாடுகளை செய்து கொண்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

### ஒரிஸா சட்டசபை

ஒரிஸ்ஸா சட்டசபையைக் கலைக்கும்படி இந்திய அரசின் மத்திய மந்திரிசபை ஜனாதிபதிக்கு சிபார்சு செய்துள்ளது

இதை ஒரிஸாவில் பல் வேறு அரசியல் கட்சிகளும் வரவேற்றுள்ளன.

## "இந்து சமுத்திரத்தில் சோவியத் பூச்சாண்டி"

### பிரிட்டிஷ் பிரதமர் மிரட்டல் பற்றி டாஸ் நிருபர்

மாஸ்கோ, ஜன. 20

டெல்லியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர் எட்வேர்ட் ஹீதபேசுகையில் தென் ஆபிரிக்க இனவெறி ஆட்சிக்கு மீண்டும் ஆயுதங்களை ஏற்றுமதி செய்ய பிரிட்டன் தீர்மானித்திருப்பது சரி என்று எல்லா வகையிலும் வாதாடினார் இவ்வாறு அனுப்பப்படும் பிரிட்டிஷ் ஆயுதக் கப்பல்கள் இந்து மகா சமுத்திரத்தின் வணிகப் பாதைகளுக்கும் பாதுகாப்பாக விளங்கும் என்று கூட அவர் சொன்னார்.

தென் ஆபிரிக்காவுக்கு ஆயுதங்களை வழங்க வேண்டும் என்ற பிரிட்டிஷ் கென்சர் வேடிவ் அரசாங்கத்தின் கருத்துக்கு எதிராக பெரும்பாலான காமன்வெல்த்நாடுகள் வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளன என்று டாஸ் விமர்சகர் திரு வாசிலு கார்கோல் எழுதியுள்ளார்.

இன்றைய நிலையில் காமன்வெல்த்தின் வாழ்வுக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளது. அதன் இருள் சூழ்ந்த நிலையைப் பிரிட்டிஷ் பிரதமர் புறக்கணிக்க முடியாது. ஏற்படக்கூடிய பிளவினைத் தடுப்பதற்காகவும் இன்றைய நெருக்கடியை எவ்வாறேனும் தணிப்பதற்காகவும் 'சோவியத் அச்சுறுத்தல்' என்ற பூச்சாண்டியை காட்டி காமன்வெல்த்நாடுகளை ஹீத் மிரட்ட முனைகிறார். இந்துமகா சமுத்திரத்தில் சோவியத் யூனியன் தனது வலிமையையும் செல்வாக்கையும் அதிகரித்துக் கொள்ளும் அபாயத்தைப் பிரிட்டனும் அதன் மேலைய கூட்டாளிகளும் எதிர்நோக்குகின்றன என்று அவர் கூறுகிறார். இந்த அபாயத்தை நீக்குவதற்கு தென் ஆபிரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பிரிட்டிஷ் ஆயுதங்கள் துணை புரியும் என்று அவர் கூறுகிறார்' என்று கார்கோல் எழுதியுள்ளார்.

இந்துமகா சமுத்திரப் பிரதேசத்திலுள்ள நாடுகள் அச்சுறுத்தவும் பிரிட்டனுக்கும் அதன் ஆபிரிக்காவுக்கு மிடையே திட்டமிடப்பட்டுள்ள அபாயகரமான வணிகம் சம்பந்தமான கண்டனங்களை அடக்கவும் பிரிட்டிஷ் பிரதமர் இவ்வாறு கூறுகிறார்.

ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள தேசவிடுதலை இயக்கத்தை ஒடுக்க வேண்டும் என்ற பிரதான நோக்குடன் தென்ஆபிரிக்க இனவெறியாளருக்குப் பிரிட்டன் ஆயுதங்களை வழங்குகிறது என்பதை அனைவரும் அறிவர். தென் ஆபிரிக்கா ரொடீஷியா ஆகியவற்றிலுள்ள இனவெறி ஆட்சியாளர்கள் போர்த்துக்கீசிய காலனியாதிக்க வாதிகளுடன் ஏற்கனவே தீவிரமாக ஒத்துழைத்து வருகின்றனர் என்கிறார் அவர்.

......

## லண்டனில் ரவி சங்கரின் இன்னிசை விருந்து

லண்டன், ஜன. 22

உலகப்புகழ் பெற்ற சித்தார் வாத்திய மேதையான ரவி சங்கரின் இன்னிசை விருந்து இம்மாதம் லண்டன் ரோயல் விழாக் கூடத்தில் நடக்கவிருக்கிறது. லண்டன் சிம்பனி வாத்திய கோஷ்டியின் விசேஷ அழைப்பிற்கிணங்க இவ்விசை விருந்தளிக்கவிருக்கும் ரவி சங்கர், மேற்கத்திய சங்கீதப் பிரியர்களுக்குப் புதியவரல்ல.

மேலைநாட்டு இசையையும், கீழைத்தேயராகபாவங்களையும் இணைத்து. இசையில் ஒருமைப்பாடு காண கடந்த பல வருடங்களாக ரவிசங்கர் முயற்சி செய்து வருகிறார். சித்தார் வாத்திய இசையில், பிரிட்டிஷ் மக்களும், வேறு பல வாத்தியக் கோஷ்டிகளும் மோகம் கொண்டு. இந்தியா சென்று அதனைப் பயில்வதற்குக் காரண கர்த்தாவாக இருந்தவர் ரவிசங்கர் என்பது குறிப்பிடத்தக்கது.

## காலி நீர்விநியோகத் திட்டத்திற்கு 625,000 பவுண் பிரிட்டிஷ் உதவி

கொழும்பு, ஜன. 21

காலி நகரின் நீர்விநியோகத்தை அபிவிருத்தி செய்வதற்கு பிரிட்டன் இலங்கைக்கு 625,000 பவுண்களை கடனாக கொடுத்துதவ விரும்புகிறது.

நீர்த்தேக்கம் ஒன்றை நிறுவுதல், சுத்திகரிப்புப் பொறிகளை அமைத்தல், 3 1/2 மைல் நீளமான பிரதான குழாய்களையும், 40 மைல் விஸ்தீரணமான விநியோகக் குழாய்களையும் அமைத்தல் போன்றன இந் நீர் விநியோகத் திட்டத்தில் அடங்கும் இத்திட்டத்திற்கு தேவையான இயந்திர சாதனங்களையும் தொழில்நுட்ப சேவைகளையும் அளிப்பதற்கு பிரிட்டனின் இந்த வட்டியில்லாக் கடனுதவி பயன் படுத்தப்படும்.

## இலங்கைவரும் பிரிட்டிஷ் நிபுணர்

லண்டன், ஜன 22

பிரிட்டனைச் சேர்ந்த நீர் சுத்திகரிப்பு நிபுணர் ஒருவர் இவ்வாரம் இலங்கை வருகிறார். பிரபல பிரிட்டிஷ் நீர் சுத்திகரிப்பு நிறுவனமான 'பட்டர்சன் கண்டி இன்டர்நஸனல்' எனப்படும் கம்பனியின் வெளிநாட்டு விற்பனை அதிபரான திரு எஸ். ஜே. வின்ட்ஸே இம்மாதம் 24ந் திகதி கொழும்புக்கு வருகிறார் 29ந் திகதி வரை அவர் இங்கு தங்கியிருப்பார்.

தமது கம்பனி இலங்கையில் அமைத்துவரும் நீர் சுத்திகரிப்புப் பொறிகளை அவர் பார்வையிடுவதுடன் மேலும் இத்தகைய பொறிகளை நிர்மாணிக்கும் சாத்தியக் கூறுகளையும் அவர் ஆராய்வார்.

## பதவி உயர்வு

தாவடி, வெள்ளி

'வட-பெரும்பாகத்தபால் அத்தியட்சகராகக் கடமையாற்றிய திரு. எம் நடராசா தபால் அமைச்சின் மேலதிக உதவிக் காரியதரிசியாக நியமனம் பெற்றுள்ளார். அவருக்குப் பதிலாக அத்தியட்சகராக யாழ் பிரதம தபால் அதிபர் திரு. வி. ஏரம்பமூர்த்தி கடமையாற்றுகிறார்.

## அச்சுவேலி கி. ச. புதிய தலைவர்

அச்சுவேலி, வெள்ளி

அச்சுவேலி கிராமசபைத் தலைவர் தெரிவு இன்று காலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு க. நல்லநாதன் தலைமையில் நடைபெற்றபோது திரு க. சுந்தரமூர்த்தி 8 வாக்குகளைப் பெற்று தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

உபதலைவராக திரு. நா. கணபதிப்பிள்ளை ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். 11-ம் வட்டார அங்கத்தவர் திரு. நா. குணரத்தினம் 12-ம் வட்டார அங்கத்தவர் திரு. சி வேலுப்பிள்ளை ஆகியோர் வாக்களிக்கவில்லை. 4-ம் வட்டார அங்கத்தவர் திரு. மு. செல்வத்துரை தலைவர் தெரிவுக்கு சமூகமளிக்கவில்லை.

தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. க. சுந்தரமூர்த்தியுடன் போட்டியிட்ட திரு. மு கந்தசாமி 3 வாக்குகளைப் பெற்றார்

## அணுவிஞ்ஞானிகள் பலியாகினர்

பாரிஸ், ஜன. 22

பிரான்ஸ் நாட்டின் அணுசக்தி விஞ்ஞானிகள் பலர் உட்பட 21 பேர் விமான விபத்தொன்றில் பலியானார்கள்

இந்த விபத்தில் இரண்டு ஜெனரல்களும், ஒரு ராணுவத்தளபதியும் மாண்டார்கள்

பிரஞ்சு அணு ஆராய்ச்சிக்கு இந்த விஞ்ஞானிகளின் மறைவு பெரிய இழப்பாகும் என்று கருதப்படுகிறது'

—

கமத்தொழில் இலாகாவில்

## ஆலோசனைக் குழுவை நியமிக்குக

யாழ்ப்பாணம், சனி

அரசகரும ஆலோசனைக் குழு சகல இலாகாக்களிலும் நடத்திவரும் தேர்தலை கமத்தொழில் சேவை இலாகாவிலும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க பொதுசேவை தொழிலாளர் சங்க யாழ் கிளை கமத்தொழில் சேவை இலாகா ஆணையாளரிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேற்படி தொழிலாளர் சங்கம் அனுப்பிவைத்துள்ள மகஜரில்:

காவலாளர்கள் 2 ஆண்டிற்கு மேலாக நாட்சம்பளமாக கடமையாற்றிவருகிறார்கள். எனவே காலியான இடங்களை பரிசிலனை செய்து இம்மாவட்டத்தில் நாட்சம்பளமாக கடமையாற்றும் காவலாளர்களை மூப்பு இடாப்பு சேவை கணித்து இவ்வூழியர்களை மாதச் சம்பளமாக்க ஆவன செய்யும்படியும் இலாகாவில்கனிஷ்ட ஊழியர்கள் தராதரத்திற்கேற்ப பதவிகளை நியமனங்கள் செய்யும்போது இவ்வூழியர்களுக்கு திறைசேரி சுற்று இலக்கம் 674 இன் பிரகாரம் சலுகை அளித்த பின்பே மாவட்ட தொழில் காண் நிலையம் மூலம் நியமனங்கள் செய்யும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

(குவிம)

— —

## அடையாள வேலைநிறுத்தம்

பரந்தன், வெள்ளி

முன்னாள் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. டட்லி குணசேகராவை மீண்டும் தலைவராக நியமிக்க வேண்டுமெனக் கோரிநேற்று கூட்டுத்தாபனத் தொழிலாளர்கள் அடையாளவேலைநிறுத்தம் செய்தனர்

வர்த்தக ஊழியர் சங்கம், பரந்தன் இரசாயனத்தொழிலாளர் சங்கம், ஐக்கிய இரசாயனத் தொழிலாளர் சங்கம். உத்தியோகத்தர் சங்கம் ஆகியன இந்த அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதாகத் தெரிகிறது.

இதைத் தொடர்ந்து கைத்தொழில்மந்திரி திரு. ரி. பி. சுபசிங்கா தொழிற்சங்கத் தலைவர்களை கொழும்பிற்கு பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளதாகத் தெரிகிறது.

### மணிவாக்கு

மனித சமுதாயம் வாழ்வின் சகல துறைகளிலும் உன்னத நிலையை அடையவேண்டும் என்ற இலட்சியத்துக்காக நாம் அனைவரும் பாடுபட வேண்டும்.

—கென்னடி

ஈழநாடு

Eelanadu Ltd. Jaffna. Daily

Telegram: "EELANADU" Jaffna;

Post Box: 49; Jaffna: Telephone: 889

சாதாரண வருடம் தை மாதம் 10-ந் திகதி (23-1-71)

## சீனாவின் பெருந்தன்மை

நமது நாட்டின் பொருளாதார நிலையை உத்தேசித்து சீனா மிகப் பெருந்தன்மையுடன் குறைந்த விலையில் அரிசி தருவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறது. இதற்காக சீன அரசாங்கத்துக்கும் சீன மக்களுக்கும் நமது நாடு நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

சீனாவும் இலங்கையும் பல வருடங்களுக்கு முன்னர் செய்துகொண்ட அரிசி-ரப்பர் பண்டமாற்று ஒப்பந்தம் வருடாவருடம் புதுப்பிக்கப்படவேண்டும். கடந்த பல வருடங்களாக இந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு வந்திருக்கிறது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாமல் ரத்துச் செய்யப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுமோ வென்ற அச்சமும் நிலவியது. இம்முறை அரிசியின் விலையைக் குறைக்கும்படியும் கூடுதலாக ரப்பரை வாங்கும்படியும் சீனாவை இலங்கை கேட்டுக்கொண்டது. இதற்கு சீனா ஒப்புக்கொள்ளும் என்பதற்கான அறிகுறிகள் முதலில் தென்படவில்லை.

உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகஅமைச்சர் தலைமையிலான இலங்கைத் தூதுகோஷ்டிக்கும் சீன வெளிநாட்டு வர்த்தகஅமைச்சர் தலைமையிலான சீனத் தூதுகோஷ்டிக்குமிடையில் கடந்த சில தினங்களாக கொழும்பில் பண்டமாற்று வர்த்தக ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவந்தன. இந்தப் பேச்சுவார்த்தைகள் கடந்த வாரம் முடிவடைந்தபோது ஒரு மெட்ரிக் தொன் அரிசிக்கு 35 பவுண் கொடுப்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. சென்ற வருடத்தில் ஒரு மெட்ரிக தொன் அரிசி 43 பவுண் 5 ஷில்லிங்காகவே வாங்கப்பட்டது. கடந்த வருட விலையை விட ஒரு மெட்ரிக தொன் அரிசியை 35 பவுணுக்கு வாங்குவது கூட லாபந்தான்.

ஒப்புக்கொள்ளப்பட்ட இந்த விலையின்படி நேற்று புதுப்பிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் கைச்சாத்திட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கைச்சாத்திடவிருந்தசமயம், இலங்கையின் பொருளாதாரநிலையை உத்தேசித்து அரிசியின் விலையை மெட்ரிக் தொனுக்கு மேலும் ஐந்து ஷில்லிங் குறைப்பதாக சீன வெளிநாட்டு வர்த்தகஅமைச்சர் தாமாகவே தெரிவித்தார். இதன்மூலம் அரிசி வாங்கும் செலவில் 50,000 பவுணை இலங்கைக்கு மிச்சப்படுத்தியிருக்கிறது சீன அரசாங்கம்.

சீன அரசாங்கத்திற்கும் சீன மக்களுக்கும் அவர்கள் காட்டியுள்ள பெருந்தன்மைக்கும் தாராளமனப்பான்மைக்கும் நமது நாடு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. அரிசி கிடைக்காத சமயத்தில் நமக்கு அரிசி தந்து உலகச்சந்தையில் நமது ரப்பருக்கு செல்வாக்கில்லாத சமயத்திலும் கூட நமது ரப்பரை நல்ல விலை கொடுத்து வாங்கி நம் நாட்டு மக்கள் பட்டினி கிடக்காமல் தடுத்தது மட்டுமல்லாமல் இதர வழிகளிலும் உதவிசெய்துவரும் சீனாவின் நல்லெண்ணத்தை மறந்துவிடமுடியாது.

கப்பல் கட்டணவிகிதத்தை வெள்ளைக்காரர் உயர்த்தியதன் மூலம் அவர்கள் மீது நம் நாட்டு மக்கள் மனக்கசப்புக்கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில், "ஏகாதிபத்திய சுரண்டலுக்கெதிரான இலங்கை மக்களின் போராட்டத்துக்கு உதவுமுகமாக" அரிசியின் விலையைத் தாமாகவே மேலும் குறைத்துக்கொண்ட சீனாவின் ராஜதந்திரத்தையும் பாராட்டவேண்டும்.

சீன அரசாங்கத்துக்கும் சீன மக்களுக்கும் நன்றி செலுத்தும் அதேசமயம் நமது கடமையும் பொறுப்பும் என்னவென்பதையும் நமது அரசும் மக்களும் சிந்திக்கவேண்டியது அவசியம். உலகச் சந்தையில் அரிசியின் விலை உயர்வாக இருந்தாலும் மிகக் குறைந்த விலையில் சீனா நமக்கு அரிசி தருவதும், செய்துகொண்ட ஒப்பந்தத்தை, தனக்கு என்னதான் கஷ்டம் வந்தாலும் அது நிறைவேற்றும் என்பதும் உண்மைதான்.

ஆனாலும் வெளிநாடுகளையே நாம் எப்போதும் நம்பியிருக்க வேண்டுமா? சீன மக்கள் வெளிநாடுகளை நம்பி வாழ்கிறார்களா?

எனவேதான் அரிசியில் உணவுப்பொருள்களில் மற்றும் அத்தியாவசியப் பொருள்களில் நமது தேவையை நாமே நிறைவேற்றிக்கொள்வதற்கான திட்டங்களை வகுத்து அவற்றைச் சரிவாகச் செயற்படுத்தவேண்டும். இதற்கு தேசிய ஐக்கியமும், தேச விசுவாசமும், கடின உழைப்பும் தேவை.

'நாடுகுடியரசான பின்னர்

## 4 ஆண்டுகள் மட்டுமே பதவிக்காலமாக வேண்டும்''

— டாக்டர் தஹா

கோட்டை, வெள்ளி

முதலாவது தேசிய நிர்ணய சபை நாடுகுடியரசான பின்னர் 4 ஆண்டுகள் மட்டுமே இயங்க வேண்டும் என்று காலி எம்.பி. டாக்டர் டபிள்யு. தகநாயக்கா ஒரு திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்துள்ளார்.

5 வருடங்கள் மட்டுமே ஆட்சிக்காலம் என்ற நியதியின் கீழ் ஆட்சிக்குவந்துள்ள தற்போதய அரசாங்கம் 7 ஆண்டுகள்வரை ஆட்சியிலிருப்பது தவறு என்று அவர் குறிப்பிட்டார்.

தற்போது வெளியிடப்பட்டிருக்கும் அரசியல் நிர்ணய சபை நகல் திட்டத்தின்படி நாடு குடியரசான பின்னர் 6 ஆண்டுகள் இப்போதய ஆட்சியாளர் தொடர்ந்து பதவிவகிப்பர். 1970 ஜூன் மாதம் பதவியை ஏற்றுக்கொண்ட அரசாங்கம் 1971 மே மாதமளவில் குடியரசாகுல் 1976ம் ஆண்டு மே மாதம்வரை ஆட்சியை நடத்துவர். இதனுல் இவர்கள் 7 ஆண்டுகள் பதவி வகித்தவர்களாவர். இவ் அரசாங்கத்தை 5 வருடங்கள் மட்டுமே ஆட்சியை நடத்த மக்கள் அனுமதியளித்தனர். எனவே நாடு குடியரசான பின்னர் முதலாவது தேசிய நிர்ணயசபை 4 ஆண்டுகள் மட்டுமே பதவிவகிக்க வேண்டும் என்று நகல் சட்டத்தில திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று டாக்டர் தகநாயக்கா கூறினார்.

# மேற்கைகைப்பற்றியசு

**எண்ணற்ற அமெரிக்கர்களின் வாழ்க்கையில் தனது 'யோக' போதனையால் புதிய திருப்பத்தை உண்டுபண்ணியவர் சுவாமி சச்சிதானந்தா அவர்கள். அவர்களது சேவையையும் அதனுல் தாம் பெற்ற பயனையும் அவரது அமெரிக்க சிஷ்ர்களே இங்குதருகிறுர்கள்**

கீழைத்தேசத்தின் ஆத்மீகத்துறை முன்னேற்றத்துக்கு உலகில் எந்தப்பகுதியும் ஈடு கொடுக்க முடியாது. சமய அடிப்படையிலான எமது வாழ்க்கையும் கலை கலாச்சாரமும் மேற்கத்திய நாடுகள் பலவற்றைக் கவர்ந்தன என்பது அங்கிருந்து வந்து கீழைத் தேசங்களில் குறிப்பாக பாரதத்தில் எமது சமய தத்துவங்களையும் கலை கலாச்சாரத்தையும்கற்றுதெளிந்த மேனுட்டவர்களால் விளங்கும்.

சமீப காலத்தில் ஐக்கிய அமெரிக்காவில் யோக போதனைகளை நடத்தி அங்குஉள்ள எத்தனையோ செல்வச் சீமான்களினதும் சீமாட்டிகளதும் வாழ்க்கை முறையை மாற்றியமைத்த பெருமை நம் நாட்டவராகிய சுவாமி சச்சிதானந்தாவையே சாரும். தற்போது சுவாமிஜியும் அவர்களது அமெரிக்க சிஷ்யர்களில் சிலரும் இலங்கை வந்துள்ளார்கள்.

சுவாஜியினது அமெரிக்க சிஷ்யர்களை குறிப்பாக பெண்களை நோக்கும்போது இவர்கள் நம் நாட்டுத் தமிழ் பெண்கள் தானே என நாம் ஐயுறவேண்டியிருக்கிறது. பல வர்ணங்களில் தமிழ் மாதர்போல சேலைகள் அணிந்து நெற்றியில் குங்குமத் திலகம் மளபளக்க அவர்கள் நடமாடித் திரியும் காட்சி மேலைத்தேச நாகரிகத்தில் நாட்டம் கொண்டு தம் கலை கலாச்சாரத்தைத் துறந்து நிற்கும் நங்கையர் சிலருக்குச் சாட்டையடி கொடுப்பது போல் அமைந்துள்ளது. சாதாரண எளிய வாழ்க்கையையே அவர்கள் வாழ்கிறுர்கள்.

### இருவேறு துருவங்களில் இணைப்பு

இம்மகளிர் நம்மைப் போல் சாதாரண வாழ்க்கையை வாழ்ந்தவர்களல்ல இவர்கள் யாவரும் பெரும் செல்வந்தர்கள். செல்வத்தின் செழிப்பால் 'ஹிப்பி' முறை வாழ்க்கையை நாகரிகமெனக்கொண்டு அதைப் பின்பற்றி வாழ்க்கையை நடாத்தியவர்கள். இவர்களது வாழ்க்கை முறையும் சுவாஜியினது வாழ்க்கை முறையும் இருவேறு துருவங்கள். இவ்விரு துருவங்களும் இணைந்ததை நோக்குமிடத்து நமது ஆன்மீகத் துறை எத்தனை சக்தி வாய்ந்தது எத்தகைய வாழ்க்கை முறையில் உள்ளவரையும் தன் சக்தியால் கவர்ந்து அவர்களை நல்வாழ்வுப்படுத்துவது என்பது தெள்ளெனத் தெளிவாகிறது.

### போதனைகளால் வாழ்க்கையில் மாற்றம்

சுவாமிஜியின் போதனைகளால் ஆயிரக்கணக்கான மேற்கத்தியர்கள் தங்கள் வாழ்க்கை முறையையே மாற்றியமைத்துள்ளார்கள் என்பதை சுவாமிஜியின் சிஷ்யர்கள் வாயிலாகவே நாம் இதையறியக்கூடியதாகவிருக்கிறது. 'புகைப்பிடித்தல்' மதுபானம் அருந்தல், மாமிசமுண்ணல் போன்ற பல தீய பழக்கவழக்கங்கள் சுவாமிஜியின் போதனைகளால் எம்மை விட்டகன்றுள்ளன என்கிறுர்கள் அவரது சிஷ்யர்கள். பலர் தமது பெயர்களை விடுத்து சுவாமிஜியுனுல் தேவா, அம்மா, சாந்தி போன்ற பெயர்களில் வழங்கப்பட்டுள்ளார்கள்.

'வாழ்க்கையென்றுல் என்ன? சேவையென்றுல் என்ன? யோகாசனம் என்றுல் என்ன? என்பன போன்ற பல கேள்விகளுக்கெல்லாம் விடை பகர்ந்து எமது வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பத்தை யுண்டு பண்ணியவர் சுவாமிஜி' என்கிறுர் சுவாமிஜியின் சிஷ்யர்களில் ஒருவரான "தேவா" என சுவாமிஜியினுல் அழைக்கப்படும் டேவிட் ஷோபிரு.

### மேற்கை கிழக்கு கைப்பற்றி விட்டது

மேற்கத்திய நாடுகள் அதிலும் வல்லரசுகள் உலகின் பல பாகங்களிலும் தமது ஆதிக்கத்தைச் செலுத்திப் பல நாடுகளைக் கைப்பற்றி அதிகாரம் செலுத்தியுள்ளன செலுத்திக்கொண்டும் வருகின்றன. ஆனுல் சுவாமிஜி தனியொரு சக்தியாக நின்று ஆத்மீகத் துறையாகிய தனது வல்லமையால் மேற்கைக் கைப்பற்றி கிழக்குக்குப் புகழ் தேடித் தந்துள்ளார் என்பதை அவரது சிஷ்யர்களைக் கண்ணுற்றவர்களும் அமெரிக்காவில் அவரது மத போதனை நிலையம் பற்றி அறிந்தவர்களும் மறுக்க மாட்டார்கள்.

சுவாமிஜியையும் அவரது போதனைகளைப் பற்றியும் அவரது சிஷ்யர்கள் வாயிலாகவே நீங்கள் அறிந்து கொள்வது நல்லதல்லவா? ஆதலால் உங்களுக்கு சுவாமிஜியின் அமெரிக்க சிஷ்யர்கள்மூவர் சுவாமிஜி பற்றிக் கூறுவதைஇங்கு தருகிறோம்.

## சாந்தி கூறுகிறுர்

எனதுவாழ்க்கையில்கஷ்டமான நிலையொன்றை அனுபவித்துக் கொண்டிருக்கையில் நான் சுவாமிஜியை சந்தித்தேன் அந்த வேளையில் 'கிப்பி' முறைவாழ்க்கையை மேற்கொண்டு மருந்துகளையும் அருந்திக் கொண்டு வாழ்க்கைநடத்தி வந்தேன் இத்தகைய வாழ்க்கை எனக்கு குழப்பமுடையதாகவும் அதே வேளையில் மனச் சந்தோஷமற்றதாகவும் இருந்தது.

நியூயோர்க்கில் சுவாமிஜி 'யோக' விரிவுரைகள் நடத்திக்கொண்டிருந்தார். அப்பொழுதுதான் நான்அவரை முதன்முதலில்சந்திக்கநேர்ந்தது. அவரைக் கண்டதும் ஒருவரது நல்வாழ்வுக்குத் தேவையான அன்பையும் அமைதியையும் விக்கவல்ல ஒருவரைச் சந்தித்துவிட்டேன் என்ற எண்ணமும் மகிழ்ச்சியும் எனக்கு ஏற்பட்டது ஆசனங்கள் பற்றிய சுவாமிஜியின்போதனைகளைக் கேட்டு அவ்வாசனங்களைப் பயின்றேன். இதனுல் எனது மனநிலை சீரடைந்தது. என்னிடமிருந்த தீயபழக்கவழக்கங்கள் யாவும்படிப்படியாக அகலத் தொடங்கின. மருந்துகள் அருந்துதல், சிகரட் புகைத்தல், மாமிசமுண்ணல் ஆகிய யாவும் என்னிடம் இருந்து படிப்படியாகவிடை பெற்றன. எனக்கும் அவை தேவையாக இருக்கவில்லை. சுவாமிஜியின் போதனைகளால் நான் அடைந்த இந்த நன்மைகள் எனது வாழ்க்கையிலேயே ஒருபுதுத் திருப்பத்தையுண்டுபண்ணினதென்றே கூறவேண்டும்.

சுயநலமற்ற சேவை, எல்லோரிடமும் அன்பு செலுத்தல், மன அமைதியுடையவராக இருத்தல் ஆகிய அம்சங்களே சுவாமிஜியின் போதனைகளில் முக்கிய இடத்தைப்பெற்றிருந்தன. சுவாமிஜியின் இந்தப் போதனைகள் ஆயிரக்கணக்கான அவரின் பக்தர்களில் பிரதிபலித்துள்ளமையை நான் நேரில்கண்டேன். குடும்பப்பிரச்னைகள் பற்றியஎண்ணமோ, உணர்ச்சியோ எனக்கு எழவுமில்லை என்னுல் அவைபற்றிப் பேசவும் முடியவில்லை

உலகின் பலபகுதிகளிலும் இவ்வாறு மனிதவாழ்வைப் பண்படுத்தத் தக்கவாறு சுவாமிஜி ஆற்றிவரும் சேவை அளப்பரியது.

## தேவா கூறுகிறுர்

சுவாமி சச்சிதானந்தாவை நான் சந்திக்கமுன்னர்யோக சாதனை செய்துகொண்டிருந்தேன். ஆனுல் நான்செய்த யோகசாதனைக்கும் சுவாமி சச்சிதானந்தா போதித்த யோக சாதனைக்குமிடையே மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமுண்டு. நான் யோகசாதனை செய்கிறேன் என நினைத்தது. மிகத்தவறுகும்.

உண்மையில் நான் செய்தது என்னவெனில் ஆசனங்களேயன்றி யோகசாதனையல்ல. ஆசனங்களைச்செய்வதன்மூலம் நான் உடல், மனநலமுள்ளவனுகவிருந்தேனேயொழிய பிறருக்கு நன்மை செய்யவேண்டுமென்றவிருப்பமோ அல்லது எண்ணமோ எனக்கு எழவில்லை. எனது வாழ்க்கைக்குத்தேவையான முக்கியமான சகல அம்சங்களையும் சுவாமிஜி எனக்குப் போதித்துள்ளார். 'நேர்மையாகவாழ்ந்து பிறருக்குச் சேவைசெய்' என்பதே அவர் எனக்குப் போதித்த பிரதானமான போதனையாகும். அவரது இந்தப்போதனையே அவரது சாதனமாகும்; வாழ்க்கையுமாகும். இதுவே அவரதுயோகசாதனையாகும் இந்த யோகசாதனையே உள அமைதிக்கு அடிகோலுவதாகும்; வழி வகுப்பதாகும்.

## அம்ம...

சுவாமி சச்சிதான... கண்டு அவரது போ... முதல்முதலாகக்கேட்... திரத்திலே எனக்கு... வாழ்க்கையில் உச்ச... மொன்றை அடைய... றேன் என்றதொரு... மும் உணர்ச்சியும்... உதயமாயிற்று.

சுவாமிஜியின் போ... ளால் ஈர்க்கப்பட்டு... றைத் தவருதுகேட்... படி ஒழுகும் பக்குவ... க்கு ஏற்பட்டது.

'யோகா' எனக்கு... செய்தது? கடவுளு... கையும் ஒன்றென்... 'யோகா எனக்கு வி... னது. தெய்வாம்சம்... திய வாழ்க்கை... போது யாவற்றையு... பதை 'யோகா' கூ... அது பொய்யானவ... துறந்து மெய்யான... ஏற்றுக்கொள்ளு... போதிக்கிறது. 'உண்... வாழ்க்கை' என்ற...

## நே... இ...

இந்தக் கேள்விக்கு... னும்தான் மறு... கிடைத்தபாடில்லை. ...ரணைகளும் ஆராய்... தேடுதல்களும் இ... தான் நடந்து கொ... கின்றன. பெரியதே... விக்குறிப்பை இவ்வு... மீது தொங்க... விட்டு அவர் எங்... மாயமாய் மறைந்... டார். அவர் இ... உயிரோடு இ... என்று, காலஞ்சென்... ராமலிங்கதேவரைப்... சிலர் பரிபூரணமாக... றுர்கள். அப்படி உ... இருந்தால் ஏன்... படாமல் இருக்கிறுர்... அதை நம்பாதவர்... கிறுர்கள்.

அவர்மீது என்ன... இருக்கிறது? இந்... ஆட்கியாண்ட பி... மீது அவர் தமது... தேசியசேனையுடன் (... ஏ.) போர் தொடுத்... குற்றமா? அமெரிக்... படிப் போர் தொ... லையா? தென்னுபி... ஐரிஷ்காரரும் போ... க்கவில்லை பிரிட்ட... கவே1947-ல் சுதந்தி... ங்குவதற்கு முன்பு... ஆண்டு ஒக்டோபர்... திகதி சிங்கப்பூரில்... இந்திய சுதந்திரப்... னம் செய்து சுதந்... சாங்கம் அமைத்த... ஜேர்மனியின் ஹி... கோரிங் முதலிய நா... வெறியர்களைப் போ... யுத்தக் குற்றங்களுக்... காரணரா? இல்லையே... ஏன் அவர் சரந்... வேண்டும்.

தற்சமயம் இந்... சாங்கத்தால் நடத்... விசாரணைகளின்மூல... தக் கேள்விக்கு விடை... முடியுமா?

இரண்டாவது உ... யுத்தம் முடிவடை... நாட்களுக்கு முன்பே... காணுமற் போய்வி... 1945-ம் ஆண்டு... மாதம் எட்டாம் தி... சப்பூரிலிருந்து ஜப்... செல்லும் வழியில் அ...

# ...பசுவாமிஜி

## ...ம்மா கூறுகிறர்

ச்சிதானந்தாவை
ரது போதனையை
லாகக்கேட்டமாதி
எனக்கு என து
யில் உச்சக்கட்ட
அடையப்போகி
றதொரு என்ன
ர்ச்சியும் என்னுள்
ற்று.
யின் போதனைக
க்கப்பட்டு அவற்
ஒதுகேட்டு அதன்
ம் பக்குவம் என
டது.
" எனக்கு என்ன
கடவுளும் இயற்
ன்றென்பதை
னக்கு விளங்கியுள்
வாம்சம்பொருந்
லை கை பெ ம்
ற்றையும் ற
பாடா' கூறவில்லை.
யானவற்றைத்
மெய்யானவற்றை
கா ள் ஞதலேயே
து: 'உண்மையே
என்றதத்து

வத்தை எனக்கு சுவாமிஜி யின் 'யோக போதனைகள் விளக்கியுள்ளன.

மேற்குக்கு சுவாமிஜி ஆற்றியசேவையில் அவர் நிறுவிய மதக்கல்வி நிலையம் முக்கியத்துவம் வாய்ந்ததொன்ருகும். இந்நிலயத்தில்இந்து மதபோதனை மட்டுமன்றி இதரமதங்களின் போதனைகளும் நடைபெறுகின்றன. இம்மதங்களின் குருமார்களும் இந்நிலயத்தில் இடம்பெறுகிருர்கள். சர்வ மத சமரசக் கொள்கையே சுவாமிஜியின் குறிக்கோளாகும்.

(இம்மூவரதும் சொந்தப் பெயர்கள் இவையல்ல. அம்மா, சாந்தி, தேவா ஆகியன சுவாமிஜியால் வழங்கப்பட்ட பெயர்களாகும் இப்பெயர்களாலேயே இவர்கள் அழைக்கப்படுகின்றுர்கள்.)

தொகுத்தவர்: கே. ஜி

---

"பத்திரிகைகள்

## மக்கள் அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்க வேண்டும்"

யாழ்ப்பாணம், சனி

"நமது நாடு சகல பின் தங்கிய நாடுகளுக்கும் உதவி யளித்துவருகிறது. இந்த வரிசையில் இலங்கைக்கும் உதவிசெய்வோம். மா, கரும்பு, டயர், இரும்புத் தொழிற்சாலைகள் அமைக்க நாம் இந்நாட்டுக்கு உதவி யளிப்பதுடன் குளிர்சாதனப்பெட்டிகளும் அன்பளிப்புச் செய்துள்ளோம். இதே போலத் தொடர்ந்தும் உதவிசெய்வோம்."

இவ்வாறு யாழ்ப்பாணச் சிங்கள மகாவித்தியாலயத்தில் நடந்த கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய ரஷ்யத் தகவல் பகுதி அதிகாரி திரு. ஐ. வி. சுச்ரோவ் கூறினர்.

டாக்டர் திரு. சுந்தரலிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் "மக்கள் அபிப்பிராயங்களை பிரதிபலிப்பதாகவே பத்திரிகை அமையவேண்டும் என்றும், இதற்காக ரஷ்யவில் மக்களின் குறைகளை நீக்கும் வழிவகைகளையும், அபிப்பிராயங்களையும் தெரிவித்து இஸ்வெஸ்தியா, பிராவ்டா முதலிய பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன என்றும், இப்பத்திரிகைகளைச் சகல நாடுகளுக்கும் அனுப்பி, நாடுகளுடன் நட்புறவை வளர்த்துவருவதாகவும், சகல நாட்டு எழுத்தாளர்களுக்கும் இடமளிக்கப்படுவதாகவும் கூறினர்.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், நியமன எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியம், திரு. ஐ. ஆர். அரியரத்தினம், திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

(மாவி. நி)

......

சிங்கப்பூர், ஜன. 22

ஆஸ்திரேலிய பிரதமர் திரு ஹோர்ட்டனின் உயிருக்கு ஆபத்து ஏற்படாத வண்ணம் சிங்கப்பூரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. திரு. கோர்ட்டனை கைக்குண்டு வீசிக் கொலைசெய்யப்போவதாக தீவிரவாதிகள் பயமுறுத்தியிருந்ததால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

---

# ஜெயராஜன் எழுதுவது:

நலலூரிலே திவ்யஜீவன சங்கத்தார் அமைத்துள்ள புதிய மண்டபத்தின் மேடையிலே சுவாமி சிவானந்தரின் திருவுருவம் தத்ரூபமாக உயிர்ச் சிற்பமாகப் பொலிவதைக் கண்டேன். புன்முறுவல் பூத்து இன்முத்திரை காட்டி மௌன உபதேசம் செய்கின்றுர்.

மண்டபத் திறப்பு விழாவன்று சில சிறுவர்கள் வாசல்புறம் அமர்ந்திருந்தனராம். மண்டபத்துள்ளே இருந்தவர்கள் பஜனை செய்தார்கள்; "மேசைமீதிருக்கும் பெரியவர் மட்டும் ஏன் பஜனையில் கலந்துகொள்ளவில்லை?" என்று ஒரு சிறுவன் மற்றொருவனிடம் கேட்டாளும்! அந்தச் சிற்பம், அவ்வளவு தத்ரூபமாக உள்ளதென்பதையும் மக்கள் மனதை எப்படிக்கவருகின்றதென்பதையும் காட்ட வேறென்னவேண்டும்?

சுவாமி சிவானந்தரின் பரிபூரண ஆசி யாழ்ப்பாணத்துக்கு இருப்பதாகவும், வேறெங்கும் இவ்வித அமைப்பு இல்லையென்றும் சுவாமி சச்சிதானந்தர் தெரிவித்தார். இந்தச் சிற்பம் நாகலிங்க ஸ்தபதியாரின் கைத்திறனும். அவரைப் பெரிதும் பாராட்டவேண்டும். அவரும் அவரது சிற்பக் கலையும் வாழ்க.

60 லட்சம் மக்கள் அடங்கிய ஒரு மாபெரும் கூட்டத்தை நீங்கள் கண்டதுண்டா? அமெரிக்காவிலே நியூயார்க்குக்குப் பக்கத்தில் "இசையும் அமைதியும்" என்ற பெயரில் வாலிபர்கள் விழா ஒன்று சமீபத்தில் நடைபெற்றது. பிரம்மாண்டமான கூட்டம் அது. அதை ஒரு பஜனையுடனும், சிறுபிரசங்கத்துடனும் தொடக்கி வைத்தார் சுவாமி சச்சிதானந்தர். ரஸ்தா போக்குவரத்து ஸ்தம்பித்து கார்கள் தடைப்பட்டன. காரில் சென்ற சுவாமி இறங்கி, பொலிஸ் ஹெலிகோப்டரில் ஏறி விழா நடக்குமிடத்துக்குச் சேரவேண்டியதாயிற்று. லட்சக்கணக்கானவர் கூடிய அக்கூட்டம் மிக அமைதியாகவும் ஒழுங்காகவும் நடைபெற்றது. சுவாமி பேசி முடிந்தபின் மழை கொட்டு கொட்டென்று கொட்டியது என்ருலும் சிறு குழப்பமுமில்லை. மூன்று நாள் நடந்த இசை விழாவும் மிக வெற்றியுடன் நடைபெற்றது.

"சுவாமியின் குழந்தைகள்" என்ற தலைப்பிலே அமெரிக்க டெலிவிஷன் கம்பெனியார் ஒரு சினிமாப் படம் எடுத்துள்ளனர். ஒரு பல்கலைக்கழகத்தில் மாணவருக்கும் பொலீசுக்கும் பெரும் கைகலப்பு. மாணவர்கள் நாசவேலையில் ஈடுபட்டனர். அவர்களை அடக்க பொலிஸ் பெரும் பாடு பட்டது. இந்தக் காட்சியுடன் படம் ஆரம்பமாகிறது. அங்கு மாணவர்கள் மயக்க மருந்துகளையும், வில்லைகளையும் வாங்கிச் சாப்பிட்டு அதில் அமைதிகாண முயலுகின்றனர்.

அவர்களுக்கெல்லாம் யோகம் கற்பித்து பஜனை செய்யச்செய்து அவர்களது வாழ்க்கையையே மாற்றுகிருர். சுவாமி நூற்றுக்கணக்கான அமெரிக்க வாலிபர்களுக்கு மந்திர தீட்சை அளித்துள்ளார். எல்லாரும் யோகாசனங்கள் செய்து, தியானம் செய்து பஜனையும் செய்யும் காட்சி நம்பமுடியவில்லை. பிறசமயத் தலைவர்களும் இதில் கலந்துகொண்டு சமய சமரசம் ஏற்பட்டு வருகிறது. இக்காட்சிகளடங்கிய அச்சினிமாப்படத்தை நேற்று முன்தினம் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் பார்த்துவிட்டு "மேன்மைகொள் சைவ நீதி உலகில் விளங்க ஆரம்பித்துவிட்டது" என்று ஓர் அன்பர் சொன்னர். மற்றொருவர், "மேலை நாட்டை வென்றுவிட்டார் சுவாமி" என்று சொல்லி சுவாமியின் சேவையைப் பாராட்டினர்.

நேற்றுக் காலை சுவாமி தமது அமெரிக்க சிஷ்யர்களுடன் திருகோணமலைக்குச் சென்றுர். முந்தாநாள் அதேமண்டபத்தில் 'அஷ்டலெட்சுமிகள்' சேர்ந்து வீணை வாசித்த காட்சி யாழ்ப்பாணத்துக்குப் பெருமை அளிப்பதாக இருந்தது. புடவை கட்டி, நெற்றியில் குங்குமப்பொட்டு இட்டிருந்த அந்த அமெரிக்கப் பெண்கள் அதைப் பெரிதும் ரஸித்தார்கள்.

---

## இன்று பிறந்த தினம்

# நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இன்றும் உயிரோடிருக்கிருரா?

கள்விக்கு இன்
மறுமொழி
டியில்லை. விசா
ஆராய்ச்சிகளும்
நம் இன்னும்
து கொண்டிருக்
பரியதோர்
இவ்வுலகத்தின்
ாங்கவிட்டு
வர் எங்கேயோ
மறைந்துவிட்
வர் இன்னமும்
இ ருர்
ஞசென் த்து
தவரைப்போல,
ணமாக நம்புகி
ப்படி உயிரோடு
ஏன் வெளிப்
ருக்கிருர் என்று
ாதவர்கள் கேட்
எ்ன குற்றம்
? இந்தியாவை
ண்ட பிரிட்டன்
தமது இந்திய
யுடன் (ஐ என்.
தொடுத்தது ஒரு
அமெரிக்கர் அப்
தொடுக்கவில்
தன்னுபிரிக்கரும்
நம் போர் தொடு
பிரிட்டன் தாளு
ல் சுதந்திரம் வழ
முன்பு 1943-ம்
க்டோபர் 21-ம்
ப்பூரில் வைத்து
தந்திரப் பிரகட
து சுதந்திர அர
மைத்தது தவரு?
ன் ஹிட்லர்,
லிய நாஜியுத்த
ளைப் போல இவர்
றங்களுக்கு இலக்
இல்லையே. பின்
ர் சரந்துறைய
ம் இந்திய அர
க் நடத்தப்படும்
ளின்மூலம் இந்
க்கு விடை காண
ாவது உலக மகா
முடிவடைய சில
கு முன்பே அவர்
போய்விட்டார்.
ஆண்டு ஆகஸ்ட்
டாம் திகதி சிங்
ந்து ஜப்பானுக்கு
வழியில் அவர் பிர

யாணம் செய்த விமானம் நொருங்கிவிட்டதாக அப்பொழுது அறிவிக்கப்பட்டது. அப்பொழுது நிலவிய மிகக் குழப்பமான நிலையில் இந்திய அரசாங்கமோ, பிரிட்டனே, ஜப்பானே இதைத் தீர விசாரிக்கவில்லை ஆனல் நேதாஜியையோ அதற்குப்பின் எவரும்நேரில் காணவில்லை. அவர் இறந்திருக்கமாட்டார் எங்கேயாவது மாறு வேடத்தில் இருப்பார் என்று அவருடைய ஆயிரக்கணக்கான அடியார்கள் இன்னும் நம்புகிருர்கள்.

பாரதப் போராட்டத்தில் காந்திஜியும் நேதாஜியும் எந்தநாளும் வேறுபட்ட கருத்துடையவர்கள். காந்திஜி அஹிம்சை, சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை முதலிய ஆயுதங்களால் தான் சுதந்திரம் பெற வேண்டுமென்று சுபாஷ் சந்திரபோஸுக்கு இவற்றில நம்பிக்கையில்லை 'எனக்கு உதிரத்தைக் கொடுங்கள், நான் சுதந்திரம் தருகிறேன்' என்று ஒரு தடவை ஐரோப்பாவிலிருந்து முழங்கினர். யுத்தத்தில் இந்திய வீரர்கள் பிரிட்டிஷ் வீரர்களுடன் தோளுக்குத்தோள் நின்று போர் புரிவதையும் இந்திய பணமும் பொருளும் பிரிட்டிஷ் யுத்தநிதிக்கு பயன்படுவதையும் அவர் அறவே வெறுத்தார். 'இந்தியாவைவிட்டு உடனே வெளியேறும்படி பிரிட்டனுக்கு ஓர் இறுதி எச்சரிக்கை விடாமல் அவர்களுக்கு உதவி செய்வது கோழைத்தனம்' என்று இந்தியா முழுவதும் சுற்றிப் பிரசாரம் செய்தார். இறுதியில் நேருஜி பட்டேல், பிரசாத், ஆஸாத் முதலியோரின் பக்கபலத்துடன் காந்திஜியின் கையே ஓங்கியது.

1939-ம் ஆண்டு மார்ச் மாதம் காங்கிரஸ் தலைவராக திரிபுராவில் விரகர் ஜனை புரிந்த நேதாஜி, உள்ளம் புண்பட்டதாலும் உடம்பு நோய்வாய்ப்பட்டதாலும் அடுத்தமேமாதமே அப்பதவியை ராஜினமாச் செய்துவிட்டு 'முன்னேற்றக்கழகம்' என்ற தமது சொந்தக் கட்சியை ஸ்தாபித்தார்.

யுத்தம் மும்முரமாக நடந்து கொண்டிருந்த சமயம் ஜப்பான் மலாயாவையும் சிங்கப்பூரையும் கைப்பற்றிவிட்டு பர்மாவிலும் காலடி எடுத்து வைத்தது. திடீரென்று 1942-ம் ஆண்டில் ஒரு நாள் சுபாஷ் போஸ் சிங்கப்பூரில் தோற்றப்பட்டார், அதன் பின் அவரே இந்திய தேசிய ராணுவத்தின் பிரதம சேனபதி. எழுபதினயிரம் இந்தியர்கள் அதில் சேர்ந்து 'டில்லி சலோ' என்று போர் முரசு கொட்டினர்கள். சுபாஷ் தமது ஓயாத முயற்சியால் இந்திய சுதந்திர அரசாங்கத்துக்கு அறுபது கோடி ரூபா சேர்த்தார். இது அவர்களுடைய சொந்த வங்கியாகிய 'ஆஸாத் ஹிந்த்' வங்கியில் போடப்பட்டது. அடிக்கடி ஜேர்மனிக்கும் ஜப்பானுக்கும் போய்வந்து தமது இயக்கத்துக்கு ஆதரவுதேடினர்.

நேதாஜியின் சுதந்திர இந்திய அரசாங்கத்தை ஜேர்மனி, ஜப்பான் இத்தாலி, தாய்லாந்து, பர்மா, பிலிப்பைன்ஸ், மஞ்சூரியா முதலிய நாடுகள் உடனே அங்கீகரித்தன புதிய அரசாங்கம் உடனே பிரிட்டன் மீதும் அமெரிக்கா மீதும் போர்ப் பிரகடனம் செய்தது. அந்தமான், நிக்கொபார் தீவுகள் ஏற்கனவே பிரிட்டிஷாரிடமிருந்து கைப்பற்றிய ஜப்பான் அவற்றை புதிய அரசுக்கு அளித்தது. இதற்கிடையில் பர்மா வழியாக இந்தியமேது படையெடுத்த ஐ. என். ஏ. துருப்புகள் மணிபுரி, விஷ்ணுபுரி பகுதிகளில் சுமார் 15,000 சதுரமைல் பிரதேசத்தைக் கைப்பற்றி புதிய அரசாங்கம் அதை ஆறுமாத காலம் வரை ஆண்டது.

இந்தியாவிலுள்ள தங்கள் அதிகாரத்தைத் துறந்து அதற்கு பூரண சுதந்திரம் அளிக்க வேண்டுமென்று பிரிட்டிஷாரை வற்புறுத்தி துரிதப்படுத்தியது. நேதாஜி சுபாஷ்சந்திரபோஸும் அவருடைய தேசிய சேனையுமே என்பதில் இப்பொழுது சிறிதும்சந்தேகமில்லை.

நேதாஜி மறைந்துவிட்டார் என்ற செய்தி வெளியான பின்பு 1946-ல் அஸ்ஸாம் மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்த மகாத்மாகாந்தி, நேதாஜி உயிருடனிருப்பதை தாம் நம்புவதாகவும் விலாசம் தெரிந்தால் அவருக்கு கடிதம் எழுத வேண்டும் என்றும் கூறியுள்ளார். காந்திஜியின் மனம் அப்பொழுது மாறிவிட்டதா? இந்திய சுதந்திரத்துக்காக சுபாஷ் செய்த தொண்டுகளுக்கு அவர் மதிப்புக் கொடுத்துவிட்டாரா?

சுபாஷ் போஸ் இன்று உயிரோடு இருந்தால் அவருக்கு ஆக 73 ஆண்டுகள்தான் முடிந்திருக்கும். அவர் பிறந்தது 23-1-1897-ல்.

— வழிப்போக்கன்

## சேருவதா இல்லையா?

யாழ்ப்பாணம், சனி

தமிழ்க்காங்கிரஸ் அரசாங்கத்துடன் நாலாவது கட்சியாகச் 'சேருவதா இல்லையா' என்பது பற்றி விரைவில் முடிவு செய்யப்படவேண்டு என, தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளைகள் தலைமைப்பீடத்திடம் கோரியுள்ளன.

கிளிநொச்சி, மீசாலை, கொக்குவில் கிளைகள் இது சம்பந்தமாக தற்பொழுது தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துடன் தொடர்பு கொண்டுள்ளனவாம்.

திரு பொன்னம்பலம் சட்ட ஆலோசனை வழங்குவதற்காக மீண்டும் இம்மாத இறுதியில் தமிழ்நாட்டிலிருந்து மலேயாவிற்குச் செல்லவிருக்கின்றுர் அதன் பின் சட்ட ஆலோசனை சம்பந்தமாக அங்கிருந்து லண்டன் செல்வாரென்றும் தெரியவருகிறது.

---

## கடந்தவருடம் 3 கோடியே 80 இலட்சம் நோயாளிகள்

கோட்டை வெள்ளி

கடந்த வருடத்தில் இந்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் ஆகக் குறைந்தது 3 தடவைகளில் அரசினர் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சை நிலயங்களில் சிகிச்சைபெற்றிருக்கின்றனர் என்று சுகாதார லாகா புள்ளிவிபரம்ஒன்று கூறுகிறது.

நாடு பூராவுமுள்ள ஆஸ்பத்திரிகளில் 3 கோடியே 60 இலட்சம்பேர் வெளி நோயாளர் சிகிச்சைநிலயங்களில் சிகிச்சை பெற்றுள்ளனர். 20 லட்சம் நோயாளிகளுக்கு வார்டுகளில் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்துவரும் நோயாளிகளின் தொகையைக் கணக்கிடும்போது, தற்போது சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 22 கோடியே 50 லட்சம் ரூபாவும் சிறந்த இலவச வைத்திய சேவையைச் செய்வதற்குப் போதாமல் இருக்குமென சுகாதார அமைச்சர் கருதுகிருர். இன்னும் கூடிய தொகைப் பணத்தை செலவிடுவதினுல் நாட்டில் அதிகரித்துவரும் நோயாளிகளின் தொகையைக் குறைக்க முடியுமென அமைச்சு வட்டாரம் எதிர் பார்க்கிறது.

......

## தீ விபத்தில் மீனவர்

யாழ்ப்பாணம், சனி

மீன் பிடிக்க வள்ளத்தில் சென்ற மூவர் எரிகாயத்திற்குள்ளாயினர். குருநகர் வாசிகளான அலோசியஸ், பஸ்தியாம், ஜோர் ஆகியோர் மன்னர் கடலில் மீன் பிடிக்கத் தமது வள்ளத்தில் சென்றபோது வள்ளத்திலுள்ள சமையல் மண்ணெண்ணை அடுப்பு தீப்பற்றி வெடித்துப் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவருகின்றனர். (கு. வி. ம)

# ஓய்வு பெறும் ஆசிரியர்கள்



## திரு. ஜேக்கப் தேவசகாயன்

மல்லாகம் அ. மி. த. க. பாடசாலையில் சுமார் 25 வருடங்களுக்குமேலாக முதலாந்தர தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. ஜேக்கப்தேவசகாயன் தமது 35 வருட ஆசிரியசேவையின் பின் இளைப்பாறியுள்ளார்.

இவர் ஏழாலை வடக்கில் ஐந்துபரம்பரையாக ஆசிரியப் புனிதத்தொழிலை புரிந்த ஒரு குடும்பத்திலே பிறந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியிலும் கல்விபயின்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார்.

இவர் மல்லாகம் அ.மி.த.க. பாடசாலைத் தலைமையாசிரியராகக் கடமையாற்றினார். இவர் அங்கு சென்றபொழுது அப்பாடசாலை மிகவும் குன்றிய நிலையில் இருந்தது. அப்பாடசாலையின் தரத்தை உயர்த்துவதில் அரும்பாடுபட்டுழைத்தார்.

திரு. தேவசகாயன் தமது கிராமத்தில் கிராமமுன்னேற்றச்சங்கம், பண்டகசாலை தென்னிந்திய யாழ்ப்பாணக் கிறிஸ்தவதிருச்சபை முதலியவற்றில் அங்கம் வகித்தார். சமூகசேவையாளரான இவர் பாடசாலையின் முன்னேற்றத்தில் அரும்பாடுபட்டுழைத்தார்.

அன்னாரின் சேவையைப் பாராட்டி கடந்த 16ந் திகதி பாராட்டுவிழா வொன்று பெற்றோர் ஆசிரிய சங்கத்தினால் நடாத்தப்பட்டது.

## மூவர் ஓய்வு

தாவடி, வியாழன்

கோண்டாவில் சைவத் தமிழ்கலவன் பாடசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய, திரு. இ. பா. குமாரசுவாமியும் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. சம்பந்தர், வித்துவான் திரு. கந்தையா ஆகியோரும் ஓய்வுபெற்றுள்ளனர்.

## திரு. சி. சின்னத்துரை

புங்குடுதீவு ஸ்ரீ இராசஇராசேஸ்வரி வித்தியாசாலையில் 27 வருடங்களாக உதவி ஆசிரியராகக்கடமையாற்றி இளைப்பாறிய திரு. சி. சின்னத்துரை ஆசிரியருக்கு பிரிவுபசாரவிழா ஒன்றைநடாத்த ஆசிரிய மாணவர்கள் ஒழுங்குசெய்து வருகின்றனர்.

## கந்தையா ஆறுமுகம்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. ஆறுமுகம் தமது சேவையினின்றும் இளைப்பாறுகின்றார். தொண்டமானாறு அமெரிக்கன்மிஷன் பாடசாலை, ஏழாலை அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஆகியவற்றிலும் கடமையாற்றினார்.

கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ பாடசாலைகளில் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்ட காலத்தில் இருவருடைய சேவையையும் நற்குணத்தையும் கண்டு நிர்வாகத்தினர் இவரை உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் தலைமை ஆசிரியராக நியமித்தனர்.

1-7-68ல் கனிஷ்ட பாடசாலை அதிபராக இவர்தரம் உயர்த்தப்பட்டார்.

சைவசமயத்தில் மிகவும் ஈடுபாடுடைய இவர் சைவசமய வளர்ச்சிக்காக அன்று தொடக்கம் இன்று வரை அரும்பாடுபட்டு உழைத்து வருகிறார்.

பல குடிசைக் கைத்தொழில்களை பாடசாலைகளிலும் வெளிஇடங்களிலும் பயில்வதற்கு அரும்பாடுபட்டுழைத்தவர். இவருடைய சேவை கல்லூரியின் பேரிழப்பாகும்.

## திருமதி பொ. நாகரத்தினம்

வேலணை அம்பிகைமகளிர் வித்தியாசாலையில் உதவித் தலைமையாசிரியராகக்கடமையாற்றிய திருமதி. பொ. நாகரத்தினம் அண்மையில் இளைப்பாறியுள்ளார்.

## திரு. நா. நடராசா

சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. நா. நடராசா ஓய்வுபெற்றுள்ளார்.

வேலணைகிராமச்சபையின் உபதலைவராக சில வருடங்களின்முன் இவர் கடமையாற்றினார்.

---

# இடமாற்றம்

சாய்ந்தமருது, வெள்ளி

மட்டக்களப்பு மாநகர சபையில் லிகிதராக கடமையாற்றிவந்த ஜனாப் ஐ. ஏ. கரீம் இம்மாதம் முதல் கல்முனைப் பட்டினசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0

புத்தளம் பள்ளிவாசல் துறையைச் சேர்ந்த அரசினர் முஸ்லிம் பாடசாலைத் தலைமையாசிரியர் ஜனாப் எஸ். செய்னுலாப்தீன் வாழைச்சேனை அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலைக்கும், சாளம்பக்கேணி அஸ்ஹிருஜ் வித்தியாலய ஆசிரியர் ஜனாப் ஏ. எம். அப்துல்லா மருதமுனை அல்-ஹிரு வித்தியாலயத்துக்கும், சவளக்கடை அ. த. க. பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. காசுபதி பெரியகல்லாறு விநாயகர் வித்தியாலயத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

0 0 0

மருதமுனை சம்சுல்இல்ம் வித்தியாலயத் தலைமையாசிரியர் ஜனாப் ஐ. எம். குத்தூஸ், மௌலவி ஜனாப் ஜலால்தீன் ஆகியோர் இம்மாதம் முதல் ஓய்வுபெறுகின்றனர்.

0 0 0

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் கடந்த நான்கு மாத காலமாக உடற்பயிற்சிப் போதனாசிரியராகக் கடமையாற்றிய திரு. த. ம. அல்பிரட் பொன்கலன் வவுனியா மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றஞ்செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

மாவிட்டபுரம், வெள்ளி

யாழ். கூட்டுறவு கல்லூரியில் விரிவுரையாளர்களாகக் கடமையாற்றிய திரு. ப. கந்தையா வவனியா கூட்டுறவுக் கல்லூரிக்கும், திரு. ஆர் எம். நாகலிங்கம் கல்முனை கூட்டுறவுக் கல்லூரிக்கும் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர்

பொல்கொல்லை கூட்டுறவுக் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய திரு. கோவிந்தசாமி யாழ். கூட்டுறவு கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுவந்துள்ளார்

---

# இன்றைய பலன்

தை மாதம் 10-ந் திகதி (23-1-71)

மேஷம்- துணிச்சலுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள். பொதுசனத் தலைமையும் கிடைக்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் பிறக்கும்.

ரிஷபம்- தாம்பத்திய வாழ்க்கையில் அதிக ஒற்றுமைக்கு இடமுண்டு. காதலர்களாயின் இன்பமான சூழ்நிலை தென்படும்.

மிதுனம்- வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம். திடீர்பிரயாணமும் ஏற்படலாம்.

கடகம்- ஒளிமயமான எதிர்காலத்துக்கான அறிகுறிகள் தென்படும், புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும்.

சிம்மம்- மனம்போல் வாழ்வு இன்று மலரும். கடமையாற்றுமிடத்தில் சகதொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்

கன்னி- வரவில் உயர்வு தென்படும். பெரியவர்களின் வாழ்த்தும் கிடைக்கும் எழுத்தாளர்களுக்கு புகழ் குவியும்.

துலாம்- பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும். தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும். அதிக சிந்தனையில் ஈடுபடுவீர்கள்.

விருட்சிகம்- இனபந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும். மனக்குழைச்சலினால் வேதனைப்படுவீர்கள். சிறிய விஷப் பயத்திற்கும் இடமுண்டு.

தனுசு- மேடைப் பேச்சாளர்களும் நடிகர்களும் பெரும் புகழ் அடைவார்கள். பொருள்வரவுக்கும் இடமுண்டு.

மகரம்- அன்னியர்கள் சகவாசம் சங்கடத்தில் மாட்டிவைக்கும். அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம்.

கும்பம்- திடீர் திருப்பம் ஏற்படும். ஆரம்பத்தில் கடினமாகத் தோன்றியவைகள் இலகுவில் முடிவடையும்.

மீனம்- பின்னைப் பாசம் உள்ளத்தில் தலைதூக்கும். சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றிகாணமுடியும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

---

# இருநேர பாடசாலை

தாவடி, வெள்ளி

ஒருநேரப் பாடசாலையாக இருந்த கோண்டாவில் மேற்குத் தமிழ் கலவன் பாடசாலையை இவ்வாண்டுமுதல் இருநேரப் பாடசாலையாக நேரம் மாற்றியுள்ளனர். இப்பாடசாலையின் விஞ்ஞானகூடம் விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

---

# 18 மீன்பிடிப் படகுகள்

மாத்தறை. வெள்ளி

அடுத்தமாதம் மாத்தறை வட்டாரத்திலுள்ள நல்வெல்ல, கந்தறை, தெவிநுவர, பொல்வத்த, மோறறை, வெலிக் மெயின்வீதி, கப்பதுத் தொட்டட ஆகிய ஆறு மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 5,45,000 ரூபாபெறுமதியான 18 மீன்பிடிப் படகுகளை வழங்க மீன்பிடி இலாகா முடிவு செய்துள்ளது. மீன்பிடி உபகரணங்களுடன் கூடிய ஒரு படகின் பெறுமதி 30,000 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

---

"ஆசிரியர்

# இடமாற்றச் சபையை கலைப்பது அபாயம்"

மாவிட்டபுரம், வெள்ளி

'இன்று ஆசிரியர் இடமாற்றங்களைக் கவனித்து வரும் இடமாற்றச்சபையைக் கலைத்துவிடும்படி சிலர் கோருகிறார்கள். ஆசிரியர்களையும், ஆட்சிமன்ற உறுப்பினர்களையும் தவறான வழி நடத்தி ஆசிரியர் இடமாற்றச் சபையைக் கலைத்துவிட்டால் வழமைபோல் தங்கள் சொந்த அபிலாஷைகளை நிறைவேற்றாலம் என்பதே இவர்களது நோக்கம் இவர்களது நோக்கத்துக்கு இடமளித்தால் அபாயகரமான நிலை ஏற்படும்'

இவ்வாறு ஆசிரியர் இடமாற்றுச் சபையைக் கலைக்க வேண்டும் எனச் சிலர் கோரிக்கை விடுவது பற்றி விடுத்த அறிக்கையில் அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழாசிரியர் சங்கங்களின் கூட்டுச்சபைச் செயலாளர் திரு. க. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

'இடமாற்றுச் சபையைக் கலைக்கக் கோருபவர்களின் ஒரே நோக்கம் தாங்கள் வடக்கிலிருந்து மாற்றப்படாமல் பார்த்துக்கொள்வதுதான். இவர்களுக்கு வெளியிடங்களில் தமிழ்ப் பாடசாலைகள் ஆசிரியர்கள் இல்லாமல் மூடப்பட்டதைப் பற்றிக் கவலையில்லை வெளியிலுள்ள தமிழாசிரியர்கள் நீண்டகாலம் கஷ்டப்படுவதைப் பற்றிக்கவலையில்லை. வெளியிலுள்ள தமிழ் மாணவர்கள் ஆசிரியர் இல்லாத காரணத்தால் வேற்று மொழியில் கல்வி கற்பதைப் பற்றி அக்கறையில்லை. வெளியிடங்களிலுள்ள அதனை தமிழாசிரியர்களின் இடங்களும் பறிபோனாலும் அதைப் பற்றியும் கவலையில்லை' என அவரது அறிக்கையில் கூறியிருக்கிறார்.

---

# மிளகாய், வெங்காயம் உத்தரவாத விலை உயரலாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மிளகாயின் உத்தரவாத விலையை 2 ரூபா 25 சதத்திலிருந்து 3 ரூபா 50 சதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக கூட்டுறவு மொத்த விற்பனவுத் தலைவர் திரு. கே ஐ ஒபயசேகரா உறுதியளித்துள்ளார். வட பகுதி விவசாய உற்பத்தியாளர் சமாசத்தலைவர் புறக்டர் என்.ரி. சிவஞானம் கூட்டுறவு மொத்தவிற்பனவு தலைவருடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது இவ்வித உறுதியளிக்கப் பட்டது.

மிளகாயின் உத்தரவாத விலையை அதிகரிக்கச் செய்வதன்மூலம், இப்பகுதி விவசாயிகளை ஊக்குவிக்க முடியும் என திரு சிவஞானம் கூ.மொ.வி தலைவரிடம் சுட்டிக் காட்டினார். இது சம்பந்தமாக அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக அவர் உறுதிகூறினார்.

வெங்காயத்தின் அரசாங்க உத்தரவாத விலையையும் உயர்த்த வேண்டும் என்ற உணவு உற்பத்தி உப கமிட்டியின் சிபார்சையும் கூ.மொ.வி. தலைவர் ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. ஓர் அந்தர் வெங்காயத்தின் உத்தரவாத விலையான 31 ரூபா 36 சதத்தை அறுவடை செய்யும் காலத்திலிருந்து படிப் படியாக 49 ரூபா 12 சதம்வரை உயர்த்த வேண்டும் என்று உணவு உற்பத்தி உப கமிட்டி கேட்டிருந்தது.

---

# நடவடிக்கை எடுக்க முடிவு

மாவிட்டபுரம், வெள்ளி

சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு இதுவரை உடுப்புகள் வழங்கப்படவில்லையென்றும் உடுப்புக்களை இன்னும் ஏழு நாட்களுக்குள் வழங்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை எடுப்பதெனவும் சீமெந்துத் தொழிற்சங்கங்கள் ஒன்றுகூடி முடிவுசெய்துள்ளன

காங்கேசன் சீமெந்து பொதுத் தொழிலாளர் யூனியனும் வர்த்தக ஊழியர் சங்க காங்கேசன் துறைக் கிளையும் சேர்ந்து புதன்கிழமை மாலை நடத்திய விசேட கூட்டத்தில் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் கொழும்பு, காலி, புத்தளம் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்

பொதுத்தொழிலாளர் யூனியன் தலைவர் திரு. க. கணபதிப்பிள்ளை தலைமை வகித்தார்.

கொழும்பு வர்த்தக ஊழியர் சங்கப் பிரதிநிதி வேணன், புத்தளம் தொழிற்சாலை சங்கப் பிரதிநிதிகளான லொக்கு விதானகே, சிறிஸ்கந்தராசா, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சங்கத்தைச் சேர்ந்த எஸ். கதிரவேலு ஆகியோரும் உரையாற்றினர்.

---

# நிலத்திலிருந்து படிப்பு

சாய்ந்தமருது, வெள்ளி

கல்முனை கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த கல்முனைக் அல்-அஸ்ஹார் வித்தியாலயத்தில் கல்வியயிலும் மாணவர்கள் கதிரை மேசைகள் இல்லாததால் தரையில் இருந்தே கல்வி கற்கின்றனர்.

0 0 0

ஊரதீவு, வெள்ளி

புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாத வித்தியாசாலையில் கல்வி பயிலும் முந்நூறு மாணவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் பாடசாலை வளவில் உள்ள கொட்டில் ஒன்றில் தரையில் இருந்தே கல்விகற்று வருகின்றனர். மாணவர்களின் நலன்கருதி தளபாட வசதிகளைச் செய்துதர வேண்டும் என்று கோரும் மகஜர் ஒன்றை பெற்றோர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளது.

---

# சுகாதாரக் கிராமங்கள்

சாய்ந்தமருது, வியா.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சாய்ந்தமருது, தம்பிலுவில் ஆகிய கிராமங்களும் சுகாதார அபிவிருத்தி மாதிரிக் கிராமங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இம்மாதிரிக் கிராமங்களில் தற்போது சுகாதார வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சாய்ந்தமருதுவிலுள்ள 10 வட்டாரங்களிலும், சாய்ந்தமது சுகாதாரப்பரிசோதகர் திரு. என். ஜோர்ஜ்யோகராசாவினால் நடாத்தப்பட்ட சுகாதார மதிப்பீட்டின் மூலம் இங்கு போசாக்குறைவும், சுகாதாரத்துக்கேற்ற வீடு கற்றூடல்கள் இல்லாதது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்குறைகள் விரைவில் நிவர்த்தி செய்யப்படவுள்ளன.

# “புதிய தபால் நிலையத்தை ஏன் திறக்கவில்லை?”

## அமைச்சருக்கு மகஜர்

ஒட்டுசுட்டான், வெள்ளி

முத்தையன்கட்டில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் தேசிய அரசாங்கம் 15 ஆயிரம் ரூபா செலவில் அமைத்த உப தபால் நிலையம் இதுவரை திறந்து வைக்கப்படாதது ஏன் என்று முத்தையன்கட்டு விவசாயிகள் மகஜர் மூலம் தபால் அமைச்சரிடம் கேட்டுள்ளனர்.

மேற்படி மகஜரின் பிரதிகள் தபால்மா அதிபர், தபால் அத்தியட்சகர், வவுனியா எம். பி. முத்தையன்கட்டு திட்ட முதல்வர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட தபால் நிலையம் செயல்படக்கூடிய வகையில், அலுவலக உபகரணங்கள் வந்துள்ளனவென்றும், உடனடியாகத் திறந்து வைத்து மக்களின் சிரமத்தைக்குறைக்கும்படியும் மகஜரில் விபரித்துள்ளனர்.

# உள்ளூராட்சி சேவையில் இடமாற்றங்கள்

கோட்டை, வெள்ளி

இடமாற்றத்திற்கு விண்ணப்பித்து இதுவரை மாற்றம் கிடைக்காத பல உள்ளூராட்சி சேவையூழியர்களுக்கும் மே மாதத்திலிருந்து மாற்றம் கிடைக்குமென நம்பப்படுகிறது.

உள்ளூராட்சி சேவை ஊழியர்கள் இடமாற்றம் சம்பந்தமாக உள்ளூர் ஆட்சி சேவை அதிகாரசபைச்செயலாளர் திரு. டி. விஜேசிங்க கீழ்வரும் அறிக்கையினை விடுத்துள்ளார்.

கடந்த சில நாட்களில் உள்ளூராட்சி சேவையில் பல இடமாற்றங்கள் செயற்படுத்தப்பட்டன. தனிப்பட்ட உத்தியோகத்தர்களாலும், சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்கள் மூலமாகவும், ஆட்சிமன்ற உறுப்பினர்களாலும் வேண்டப்பட்டதன் விளைவாகவே இடமாற்றங்கள் செய்யப்பட்டன, இவற்றில் சில இடமாற்றங்கள 11-71 தொடக்கம் செயற்படுத்தப்பட்டன. இதுவரை ஒரு இடமாற்றத்திற்கான வேண்டுகோள் நிறைவேற்றப்படாம விருப்பின் அவ்வேண்டுகோள் அங்கீகரிப்பதற்கு மிகவும் கஷ்டமாகத்தோன்றிய ஒன்றெனக் கருதப்படவேண்டியதாகும்.

இதுவரை கவனிக்கப்படாத விண்ணப்பங்கள் இவ்வருடம் மார்ச் மாதத்தில் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். பரிசிலனையின் பின்னர் அளிக்கப்படக் கூடிய விண்ணப்பங்கள் 1-5-71-ம் திகதி தொடக்கம் செயற்படுத்தப்படும். அதுசம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் அப்படியான இடமாற்றக் கட்டளைகளை 1-4-71-ம் திகதிக்கு முன்னாகப் பெறுவார்கள். அதன் பின்னர் அவை சார்பான முறையீடுகள் பரிசிலிக்கப்பட்டு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்கூறிய வகுதிகளுக் கடங்காத மற்றெல்லா இடமாற்றங்களும் வருடமுடிவில் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அப்படியான விண்ணப்பங்கள் 1971 ஆகஸ்ட் மாதம் முடிவதற்கு முன்பாக இவ்வலுவலகத்தில் கிடைக்கப்பெறவேண்டும். அவ்விண்ணப்பங்கள் பரிசிலனைக்குஎடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் அளிக்கப்படக்கூடிய இடமாற்றங்கள் 1-1-72-ம் திகதி தொடக்கம் செயற்படுமாறு அளிக்கப்படும்;

ஒழுக்காற்றுக்குரிய காரணங்கள் போன்ற விசேஷ சூழ்நிலைகளைத் தவிர்ந்த மேற்கூறிய நடைமுறைக்கு அப்பாற்பட்ட இடமாற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்'

மேற்கூறப்பட்ட நடைமுறையை மீறி தாங்களாகவே தங்கள் சார்பில் வெறொருவர் மூலமாகவோ இடமாற்ற விண்ணப்பங்களைச்செய்யவேண்டாமென உ. ஆ. சேவை ஊழியர்கள் வேண்டப்படுகின்றனர். ஒரு புதிய இடமாற்றக் கொள்கையைத் தயாரிப்பது பற்றியும் இடமாற்றச்சபை நிறுவுவது சார்பாகவும் தற்போது பரிசிலனை செய்யப்பட்டு வருகின்றது.

(அம். நி.)

—

## ‘நாஸர்’ வெற்றி

சாய்ந்தமருது, வெள்ளி

பொத்துவில் நாஸர் விளையாட்டுக் கழகத்திற்கும், பொத்துவில் அண்ணா விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் நாஸர் விளையாட்டுக்கழகம் 3-0 கோல்களால் வெற்றிபெற்றது. பொத்துவில் தாமரை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு ஜனாப் எம். ஐ. எம். இப்றாகீம் மத்தியஸ்தம் வகித்தார்.

—

## உதவி அமைச்சர் விஜயம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

கைத்தொழில் அமைச்சின் உதவி அமைச்சர் திரு. சூரியாராச்சி நாரந்தனை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அலுவலகத்திற்கு திடீர் விஜயஞ்செய்து கட்சியின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார்.

மண்கும்பானில் ஒரு கண்ணாடித் தொழிற்சாலையை நிறுவித்தருமாறு கட்சிப் பிரமுகர்கள் உதவி அமைச்சரிடம் கேட்டுக்கொண்டனர்.

உதவித் தொழில் அமைச்சர் திரு. சிறிவர்த்தனவும் இங்கு விஜயஞ்செய்தபோது தீவுப்பகுதி இளைஞர்களின் நல்வாழ்வு கருதித் தொழிற்பயிற்சி நிலையமொன்றையும் மின்தறி நிலையமொன்றையும் அமைத்துத் தரவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர்.

—

## பின்போடப்பட்டது

அம்பன், வெள்ளி

வடமராட்சிப் பகுதியிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் இம்மாதம் 18ம்திகதி நடைபெறவிருந்த உதைபந்தாட்ட சாம்பியன் தெரிவுப்போட்டி இம்மாதம் 23-ம் திகதி பின்போடப்பட்டுள்ளது.

—

## வரவேற்கத் தீர்மானம்

வேலணை, வெள்ளி

மேலதிக அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்ற வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோசெப், உதவி உள்ளூராட்சி ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு வி. நல்லைநாதன் ஆகியோரை வரவேற்று உபசரிப்பதென வேலணை கிராமசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## புதுவருட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி

புங்குடுதீவு சாந்தி சனசமூக நிலையத்தின் 2-வது ஆண்டு விழா அண்மையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: நா. திருநாவுக்கரசு, இ. மாதன், தலைவர்: ச. பொன்னம்பலம், உபதலைவர்: ஐ. அந்தோனி, செயலாளர்: இ. சின்னத்தம்பி, உபசெயலாளர்: ஐ. கதிர்காமு, பொருளாளர்: யோ. வல்லிபுரம், கணக்குப் பரிசோதகர்: பே. அந்தோனிப்பிள்ளை, விளையாட்டுப்பகுதித் தலைவர்: நா. வேலுப்பிள்ளை, விளையாட்டுப் பகுதி செயலாளர்: வ. சவரிமுத்து. நிர்வாகசபை உறுப்பினராக வ. மாதவன் தெரிவு செய்யப்பட்டார்.

0 0 0

யாழ்ப்பாணம், சனி

கீரிமலை எம். ஜி. ஆர். ரசிகர் மன்றப் புதுவருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ் எஸ் மூர்த்தி துணைத் தலைவர்: எ. சுப்பிரமணியம் செயலாளர்: முதம்பித்துரை பொருளாளர். கே சண்முகநாதன் இணைச்செயலாளர்: கே சந்திரன் கே பாலேந்திரா நிர்வாகசபைபொறுப்பாளர்கள்: கே கணபதி எஸ் தனபாலசிங்கம் கே இராஜேந்திரா வி ஜெகநாதன்.

0 0 0

ஊர்காவற்றுறை, வெள்ளி

சரவணை - சின்னமடு றோமன்கத்தோலிக்கப் பாடசாலையின் பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு கு சபாரத்தினம் (பதில் தலைமை ஆசிரியர்) காரியதரிசி: திரு கு பத்மநாதன் தனாதிகாரி: திரு கு மத்தியாஸ் நிர்வாக சபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

0 0 0

ஊர்காவற்றுறை. வெள்ளி

புங்குடுதீவு- இறுப்பிட்டி சனசமூகநிலைய வருடாந்தக் கூட்டத்தின்போது பின்வருபவர்கள் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: திரு பி கார்த்திகேசு, காரியதரிசி: திரு வி எஸ் சிவலிங்கம், தனாதிகாரி திரு க ஜெயவீரசிங்கம்.

நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

—

## இடமாற்றம் ரத்து

ஊரதீவு. வெள்ளி

வேலணை மத்திய கல்லூரி விவசாயப் போதனாசிரியர் திரு. பொ. நடராசாவின் கிடைக்கப்பெற்றிருந்த இடமாற்ற ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

—

## கோரிக்கைகள்

ஊர்காவற்றுறை, வெள்ளி

சிறுபான்மைத் தமிழ்ப் பிள்ளைகள் அதிகமாகக் கல்வி கற்கும் சரவணை -சின்னமடுப் பாடசாலையின் இடநெருக்கடியைத் தீர்க்க வேண்டுமெனத் தீவுப்பகுதிப் பிரதிநிதியையும்; நியமன எம். பி. திரு. எம் சி. சுப்பிரமணியத்தையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றைப் பிரஸ்தாப பாடசாலையின் பெற்றோர்-ஆசிரியர்சங்கம்நிறைவேற்றியுள்ளது

பாடசாலையின் தளபாடக் குறைத் தட்டுப்பாட்டை நீக்கவும், 90க்கு மேற்பட்ட இந்துப் பிள்ளைகள் இங்கு கல்வி கற்பதால் ஓர் இந்து ஆசிரியரை நியமிக்கவும் இச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்புத்துறையில்

# பொது நூல் நிலையம் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், சனி

கொழும்புத்துறையில் நூல் நிலையம் ஒன்றை அமைப்பதற்கான பொதுக்கூட்டம் ஒன்று கொழும்புத்துறை முன்னை நாள் கிராமசிரேஷ்ட தலைமைக்காரர் திரு. இ. சோமசுந்தரம் தலைமையில் கூடியது.

தலைவர் ஆரம்ப உரையின் போது வாசிகசாலையின் அவசியத்தை விளக்கியதோடு எவ்வித பாகுபாடுமின்றிப் பலர் சமூகம் கொடுத்திருப்பதைப்பாராட்டினார்.

கூட்ட அமைப்பாளர்களுள் ஒருவரும் மாநகரசபை உறுப்பினருமான திரு. தம்பு கந்தையா பேசுகையில், யாழ். மாநகரசபை வட்டாரங்களுள் முன்னோடியாக கொழும்புத்துறையிலேயே பொது நூல் நிலையம் அமைகிறதென்றும் அதனால் பலரும் நன்மைபெற வாய்ப்பு ஏற்படுகின்றதென்றும் எதிர்காலத்தில் மாநகரசபையின் உதவியுடன் அது இயங்குவதற்கு வழிஏற்படலாமென்றும் தெரிவித்தார்.

கூட்டத்தில் மக்கள் குழுவொன்றை அமைக்கும் பிரேரணை நிறைறேற்றப்பட்டதோடு நூல்நிலையத்தைஇலந்தைக்குளம் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் அமைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்;- தலைவர்: திரு இ. சோமசுந்தரம், காரியதரிசி: திரு. தம்பு கந்தையா, உபகாரியதரிசி. திரு. வே. பொன்னம்பலம் தனாதிகாரி: திரு. இ. செல்வராசன்.

நிர்வாகக்குழு உறுப்பினராக திருவாளர்கள் வே. தங்கவேலு. சி முத்துக்குமாரசாமி, இ. செ. கந்தசாமி. சி. நடராஜா. க. சோமசுந்தரம், செ இராஜரத்னம், பா. சிவானந்தன், பி. வி ஜெயரத்தினம், து. திருஞானசம்பந்தர், அ. தங்கராஜா. சி. பரமானந்தம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

# அரசாங்க ஊழியருக்கு மாளிகாவத்தையில் 60 வீடுகள்

கோட்டை, வெள்ளி

மாளிகாவத்தையில் குறைந்த வாடகையில் வீடுகள் கட்டப்பட உள்ளன. உடனடியாக 60 வீடுகளை நிர்மாணிப்பதற்கான திட்டம் ஒன்றை வீடமைப்பு கட்டிட அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் ஆரம்பித்து வைத்துள்ளார்.

கொழும்பில் வேலைசெய்பவர்களில் 62 விகிதமானோர் 250 ரூபாவிற்குக் குறைவான சம்பளத்தைப் பெறுபவர்களாயிருந்தும் அவர்கள் வீட்டு வாடகையாக அதிக தொகையைச் செலுத்த வேண்டியிருப்பதை அவதானித்த அமைச்சர் குறைந்த வாடகையில் அரசாங்க ஊழியருக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதற்காக இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளார்.

மாளிகாவத்தையில் 8 ஏக்கர் நிலத்தில் இரண்டு மாத காலத்திற்குள் இத்திட்டத்தின் முதற்படி பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பஸ் சேவை சீரில்லையாம்

தாவடி, வெள்ளி

‘சங்கானையில் இருந்து புறப்பட்டு மானிப்பாய் ஊடாக யாழ்ப்பாணம்செல்லும் பஸ்சேவை சீரின்றியிருக்கின்றது.

காலையில் சங்கானையில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் அரசாங்க உத்தியோகத்தர்கள், தொழிலாளர்கள், பாடசாலை மாணவ-மாணவிகள் நேரத்திற்குச் செல்ல முடியாமல் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

குறிப்பாக மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்கள் சுமார் மூன்றரை மைல்கள் தூரம் நடந்து வீடு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் மற்றைய பஸ்கள் இடமின்மை காரணமாக இவர்களை ஏற்றுவதில்லையென்றும் தெரியவருகிறது.

சங்கானை பஸ் பிரயாணிகள் சங்கம் பஸ்சேவை சீர்கேடு சம்பந்தமாக இ. போ. ச. மேலிடத்திற்கு எழுதியுள்ளது. ஏற்கெனவே பஸ் சேவையை சீராக்குவதென இ. போ. ச மேலிடம் உறுதியளித்திருந்ததென்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

—

## 18ந் திகதி பகிரங்க விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

பதினான்கு சங்கங்கள் கூட்டாக சேர்ந்துள்ள யாழ். மாவட்டக் கூட்டுறவு துறைமுகசேவை சமாஜத்தின் நிதி நிலை பற்றிய பகிரங்க விசாரணை இம்மாகம் 18ம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

யாழ் மக்கள் துறைமுகத் தொழிலாளர் பொதுச் சேவை கூட்டுறவுச் சங்க அங்கத்தினர் ஏற்கனவே பிரதம கூட்டுறவு பரிசோதகர் திரு. ராஜபக்ஸாவிடம் நேரில் செய்துகொண்ட முறையீட்டின்பேரில் உதவி கூட்டுறவு ஆணையாளர் திரு ஜே. எஸ் எம். டி. சில்வா தலைமையில் பகிரங்க விசாரணை சங்க சமாஜக்கட்டிடத்தில் ஆரம்பமாகியுள்ளது.

—

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 23—1—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அல்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்,

344 மீ. அல்ட் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அல்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 முத்திநெறி, 6-30 பெண்ணுலகம், 7-00 ஞானமஞ்சரி, 7-15 சித்திரம், 7-45 வாத்தியஇசை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைநிகழ்ச்சி, 10-30 செய்தித்தொகுப்பு.

# இந்துமாகடல் அமைதிப் பிரதேசமாக இருக்க வல்லரசுகள் உறுதியளிக்கவேண்டும்

## —பிரதமர் சிறிமா

சிங்கப்பூர், ஜன 21

இந்து மகா சமுத்திரம் நடுநிலைமைப் பிரதேசமாகவும், அணுவாயுத தடுப்பு அமைதிப் பிரதேசமாகவும் இருக்க வேண்டுமென பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஓர் தீர்மானத்தை சிங்கப்பூரில் நடைபெறும் சாம்ராஜ்ய பிரதமர்கள் மகா நாட்டில் சமர்ப்பித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

பிரதமர் இத்தீர்மானத்தைச் சமர்ப்பித்துப் பேசுகையில், இந்து சமுத்திரம் அமைதிப் பிரதேசமாக இருக்க வல்லரசுகள் உத்தரவாதமளிக்க வேண்டும். இந்து சமுத்திரத்தில் பிரிட்டன் எந்த வித தளங்களை அமைத்தாலும் பிறவல்லரசுகள் மேலும் தளங்களை அமைப்பதற்கு வழி ஏற்படுத்தும் இப்பகுதியை அமைதிப் பிரதேசமாக்குவதற்கு தளங்களை அகற்றுவது மட்டுமல்ல மேலும் ஆயுதங்களையும் தளங்களையும் எந்த வல்லரசும்அமைக்காது இருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டும். வர்த்தகத் துறையை சரியான முறையில் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு பிரிட்டனுக்கு உரிமை உண்டென்பதை நான் மறுக்கவில்லை. இந்து சமுத்திரத்தில் பிரிட்டன் தளம் அமைப்பதாக இருந்தாலும் அது அமெரிக்காவின் கட்டுப் பாட்டிலேயே இருக்கும். இதனால் பிற வல்லரசுகளும் தளம் அமைக்க இடம் உண்டாகும்.

பிரிட்டனின் வர்த்தகப் பாதுகாப்புத் தன்மையை நான் நன்கு உணர்வேன். இந்தப் பாதுகாப்பை கருதி அமைக்கப் படும் இத்தளங்களை வேறு காரணங்களுக்காக அந்நாடுகள் பாவிக்காதென்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது. சாம்ராஜ்ய நாடுகளின் பிரதேசங்களில் இவ்வித தளங்களை அமைக்கும் பொழுது அந்நாடுகளுடன் கலந்தாலோசியாமலோ அனுமதி பெருமலோ செய்வது தவருனதாகும். இப்பொழுதுகூட காலங் கடந்துவிடவில்லை. வல்லரசுகள் இந்து மகா சமுத்திரம் அமைதிப்பிரதேசமாகவும் நடுநிலைமைப் பிரதேசமாகவும் இருப்பதற்கு இப்பொழுதுகூட உத்தரவாதம் அளிக்கலாம். இப்பகுதியில் சமாதானம் அணுவாயுத தடுப்புப் பிரதேசமாக இருப்பதற்கு சாம்ராஜ்ய நாடுகள் முன்வர வேண்டுமெனப் பிரதமர் வேண்டுகோள் விடுத்தார்.

அண்மையில் லுசாக்கா மகாநாட்டில ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையான நடுநிலைமைக் கொள்கை சாம்ராஜ்ய நாடுகளுக்கும் பொருந்தும். வல்லரசுகளின் பலத்தை சமநிலைப்படுத்துவதினல் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. பெரு வல்லரசுகளின் ஊடுருவலிலிருந்து சிறிய நாடுகள் பாதுகாத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ருர்

இந்து மகா சமுத்திரம் அமைதிப்பிரதேசமாகவே இருக்கவேண்டும் என்று இந்தியத் தூதுக்குழுத் தலைவர் திரு சுவரண்சிங் வலியுறுத்திஞர்.

அவர் மேலும் பிரிட்டன் தென்னுபிரிக்காவிற்குத் தொடர்ந்து ஆயுதமளிக்க முடிவுசெய்யுமாஞல் இந்தியா அதை கடுமையாக எதிர்நோக்கவேண்டியிருக்கும். தென்னுபிரிக்காவுடன் செய்துகொண்ட வர்த்தக உடன்படிக்கையின்படி ஆயுதம் அளிக்கவேண்டிய அவசியமிருக்குமென நினைக்கவில்லை. பிரிட்டனைவிட தென்னுபிரிக்கா வேறு நாடுகளிடம் ஆயுதங்களைப்பெற முடியும், இந்துமாக்கடலில் சோவியத் கடற்படை பெருகிவருகிறதென்ற கற்பனை பிரட்டலைப் பெரிதாக பிரிட்டன் எடுப்பதுபோல பிரிட்டனின் தளம் பற்றி இந்துமாக்கடலைசுற்றியுள்ள நாடுகள் உணர்வதில் தவறில்லையே என்று கூறிஞர்.

# இந்திரா - கருணநிதி மீதான றிட் மனுக்கள் நிராகரிப்பு

சென்னை, ஜன. 21

இந்திய லோகசபை கலைக்கப்பட்ட பின் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும், தமிழ்நாடு சட்டசபை கலைக்கப்பட்டபின் முதலமைச்சர் மு. கருணநிதியும் தொடர்ந்தும் பதவி வகிப்பது செல்லுபடியாகும் தன்மையை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நான்கு றிட் மனுக்களையும் மேற்படி நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. சென்னை உயர்நீதிமன்றத்தின் முழுப் பிரிவும் இத்தீர்ப்பை அளித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. றிட் மனுக்களை நிராகரித்ததற்குரிய காரணங்களைப் பின் வெளியிடுவதாக நீதியரசர்கள் தெரிவித்தனர்

இவ்வழக்கை பிரதம நீதியரசர் திரு. கே. விராசாமி நீதியரசர்கள் திரு. ரமபிரஸாதராவோ, திரு. வி. ராகவன் ஆகியோர் விசாரணை செய்தனர்

## கோலாலம்பூரில் திருவாசகமணி

கோலாலம்பூர் ஜன. 21

திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் கோலாம்பூர் வந்துள்ளார். மலாயாவில் இந்து சமயப் பிரசாரம் செய்துவிட்டு கே. எம். பாலசுப்பிரமணியம் இந்தோனேஷியா சென்று மடோன், ஜகர்த்தா ஆகிய நகர்களில் பிரசாரம் செய்த பின் மீண்டும் கோலாலம்பூருக்கு திரும்பியுள்ளார்.

இந்தோனேஷியாவில் இவர் தங்கியிருக்கும் காலத்தில் இந்துசமயம், தமிழர் பண்பாடு, சைவசமயம் என்பனபற்றி அதிகமான சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்.

......

## ஊர்வசி நாடகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வேம்படி மகளிர் கல்லூரி மாணவர் 'ஊர்வசி' என்னும் நாட்டிய நாடகத்தை இம்மாதம் 26, 27-ந் திகதிகளில் கல்லூரி மண்டபத்தில் அரங்கேற்றவிருக்கின்றனர்'

## கட்டுப்பெதததை விவகாரம்

கோட்டை, வியா.

கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரியில் நவம்பர் 5-ம் திகதியிலிருந்து நடைபெற்ற சம்பவங்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தனிநபர் கமிஷன் ஒன்றை கல்வி அமைச்சர் டாக்டர் பதியூதின் மஹ்மூத் நியமித்துள்ளார்

ஓய்வுபெற்ற அரசாங்க தர்மகர்த்தா திரு. ஹறி சமரநாயக்கா இவற்றை விசாரணைசெய்து அறிக்கை சமர்ப்பிப்பார். இச்சம்பவங்களுக்கு வெளியார் தலையீடு எதுவும் இருந்ததா என்பது பற்றி விசாரண செய்யுமாறு அமைச்சர் பணித்துள்ளார்

கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரியிலிருந்து மாணவர் வெளிநடப்புச் செய்ததும் அதனுல் கல்லூரி மூடப்பட்டதும் தெரிந்ததே

——

## அணைக்கட்டுவேலை

சாய்ந்தமருது, வெள்ளி

பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்த சில்லிக்கொடி ஆற்று அணைக்கட்டுவேலைகள் சுமார் 43 ஆயிரம்ரூபா செலவில் கட்டப்பட்டு வருகின்றன. இதன்வேலைகள்முடிவடைந்ததும் 464 ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாய்ச்ச முடியுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

## ஆசிரியர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் தனியார் போதனு நிலையம் (Private Tutory) ஒன்றிற்கு பொது தராதரப் பத்திர (சாதாரணம்) வகுப்பிற்கு படிப்பிப்பதற்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களும், விஞ்ஞான பட்டதாரிகளும், சிங்களம், நடனம், சங்கீதம், தையல் ஆகியன கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களும் தேவை.

விண்ணப்பிக்க: ரைரூ இன்ரடக்சன்ஸ் சென்ரர். 463, காலி வீதி, கொழும்பு-3. 2736

## தூதுக்குழு வற்புறுத்து

ஊரதீவு, வெள்ளி

புங்குடுதீவு ஸ்ரீகணேச வித்தியாசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றுக்குறையை நீக்கி அப்பாடசாலை மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கு வழிவகுக்குமாறு, தீவுப்பகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. ப. கதிரவேலு தலைமையில் வடமாநிலக் கல்வியதிபதி திரு. டபிள்யூ. பீ. சி. மகாதந்திலவைச் சந்தித்துப் பேசிய தூதுக்குழு வற்புறுத்தியது. இக்குழுவில் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. நா. கார்த்திகேசு, தீவுப்பகுதி ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. துரைசிங்கம் உட்படப் பலர் அங்கம் வகித்தனர்.

......

## சலவைத் தொழிலாளர்நிலை

சாய்ந்தமருது, வெள்ளி

கல்முனைப் பகுதியில் சலவைத் தொழிலுக்கான சோடா மற்றும் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடும், விலைஏற்றமும் ஏற்பட்டுள்ளது. இதனுல், சலவைத் தொழிலாளர்கள் பெரும் நஷ்டத்திற்கும் கஷ்டத்திற்கும் ஆளாகியுள்ளனர்.

இப்பகுதியில் உபஉணவுப் பொருட்களான சின்னவெங்காயம், பம்பாய் வெங்காயம்,கடலைபோன்ற பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம்

## வருடாந்த விழா

செவ்வாய்க்கிழமை (26-1-71) காலை 9 மணி முதல் வழக்கம்போல் கொண்டாட்டம் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகும். பிற்பகல் 2-30 மணிக்கு வருடாந்தப் பொதுக்கூட்டம்.

பழைய மாணவர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

வை. ச. செந்தில்நாதன்,
கௌரவ செயலாளர்.

யா. இ. க.
23-1-71. 2739

# 1-வது பரிசு டிக்கட்டை உடுவில் எம். பி. இழுப்பார்

யாழ்ப்பாணம், சனி

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நாளை மாலை இழுக்கப்படவிருக்கும் தேசிய சுவீப்பின் முதலாவது பரிசுக்கான இலக்கங்களை உடுவில் எம். பி. வி. தர்மலிங்கம் இழுப்பார்.

தேசிய சுவீப் இழுப்புவிழாவில நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்.

இரண்டாவது பரிசுக்கான டிக்கட் இலக்கங்களை யாழ்ப்பாண மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா இழுப்பார்.

மூன்ருவது பரிசுக்கான டிக்கட் இலக்கங்களை மானிப்பாய் பட்டினசபை தலைவர் திரு. எஸ். ராஜன் இழுப்பார். இவ்விழாவில் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

## தொடர்ந்தும் ரிமாண்டில்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சுதந்திரக் கட்சிக்கிளைக்காரியாலயத்தில் எறிகுண்டு காணப்பட்டது சம்பந்தமாக சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட நபர் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு கொல்வின் மெண்டிஸ் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

இந்த நபருக்கு எதிராக பொலிசார் நேற்று குற்றப் பத்திரிகை தாக்கல்செய்தனர்.

எதிரிகள் சார்பில், அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம், புறக்டர் வி. ஏ. ஈ. பாலசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர். வழக்காளி தரப்பில் பொலிசாரின் உதவியுடன் புறக்டர் வி. நடாாசா ஆஜராஞர்.

மாஜிஸ்திரேட் சந்தேக நபரைத் தொடர்ந்து ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு விசாரணையை அடுத்தமாதம் 3-ம் திகதி வரை ஒத்திவைத்தார்.

## சிலேட் விலை குறையும்

கோட்டை. வெள்ளி

பள்ளிக்கூடப்பிள்ளைகளின் சிலேட் பலகைகள் இனி குறைந்த விலையில் கிடைக்கும்.

இதுவரை 95 சதத்துக்கு விற்கப்பட்ட சிலேட்டுகள் 80 சதத்துக்கு கிடைக்கும்.

இந்தச் சிலேட்டுகள் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையங்களிலும் கூட்டுறவுச் சங்கக் கடைகளிலும் கிடைக்கும்.

## நிதியமைச்சர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

10-30 மணிக்கு நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கும் நிதியமைச்சர் சென்று தரிசிப்பார். காலை 11 30மணிக்கு பருத்தித்துறை உடுப்பிட்டித் தொகுதி வாலிப முன்னணியினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் உரைநிகழ்த்துவார் நண்பகல் 12 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி விஞ்ஞான கூடத்தைத் திறந்து வைப்பார். நண்பகல் 12-55 மணிக்கு யாழ்ப்பாண மாநகரசபையில் நண்பகல் விருந்தளிக்கப்படும். பிற்பகல் 2 மணி முதல் 3-30 மணி வரை புளுறியனில் ஓய்வுபெறுவார். 4 மணிக்கு நியமன எம். பி. திரு எம். சி. சுப்பிரமணியம் தலைமை தாங்கும் சீவல் தொழிலாளர் சங்கத்தினரைச் சந்திப்பார். 4-30 மணிக்கு யாழ். நகரமண்டபத்தில் வரவு-செலவுத் திட்டம் என்பது பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இரவு 7 மணிக்கு யாழ். இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியினரால் வரவேற்பு. இரவு 8 மணிக்குச் சுழிபுரம் டாக்டர் என்.ரி சம்பந்தன் தலைமையில் சமசமாஜ வாலிப முன்னணியினரால் வரவேற்பு. இரவு 9மணிக்கு உள்ளூர் கட்சி உறுப்பினர்களால் இராப்போசன விருந்து

26ந் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சமசமாஜ வாலிப முன்னணி மகாநாட்டில் உரை நிகழ்த்துவார். பிற்பகல் 4-30 மணிக்கு நடைபெறும் ஊர்வலத்தில் கலந்துகொள்வார், இரவு 6 மணிக்கு நடைபெறும் கூட்டத்தில் உரைநிகழ்த்துவார்

## அமைச்சர் விஜயம் ரத்து

கொழும்பு, வெள்ளி

கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் மந்திரி திரு. ரி. பி. சுபசிங்காவின் வடபகுதி நான்கு நாள் விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் அமைச்சர் இம்மாதம் 25ந் திகதி வடபகுதிக்கு விஜயஞ்செய்வாரென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது